# அனலைதீவு எழுவடிவயல்
# ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய
# கும்பாபிஷேக மலர்

University of Jaffna
235.305
ANA
183611(AR; Main)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அனலைதீவு எழுவடிவயல்

## எழுமங்கை நாச்சிமார் என வழங்கும்

# ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய



University of Jaffna
RECD 1988-10-2
Periodicals
Library

நவகுண்ட யாக அநாவர்த்தனப் பிரதிஷ்டா

திருக்குடத் திருமஞ்சன மஹா

# கும்பாபிஷேக மலர்

27-6-1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனலைதீவு, எழுவடிவயல், எழுமங்கை நாச்சிமார்
என வழங்கும்

# ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய

நவகுண்ட யாக புநராவர்த்தனப் பிரதிஷ்டா

திருக்குடத் திருமஞ்சன

# மஹா கும்பாபிஷேக மலர்

விபவ வருஷம் ஆனித் திங்கள் 13ம் நாள்

27-06-1988

ARCHIVES

University of Jaffna Sri Lanka
1988-10-28
Periodicals
Library

183611

வெளியீடு:

அனலைதீவு எழுமங்கை நாச்சிமார் ஸ்ரீ மனோன்மணி அம்பாள்
தேவஸ்தான பரிபாலனசபையார்

183611

University of Jaffna
183611
Library

University of Jaffna Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
அம்பாள் துணை

# அனலைதீவு எழுமங்கை நாச்சிமார்
# ஸ்ரீ மனோன்மணி அம்பாள் தேவஸ்தான பரிபாலன சபை

*தலைவர்:* திரு. வ. பழநி அவர்கள்
*உப தலைவர்:* திரு. வே. குகதாசன் அவர்கள்
*முகாமையாளர்:* திரு. க. ஆறுமுகம் அவர்கள்
*செயலாளர்:* திரு. பே. கணபதிப்பிள்ளை அவர்கள்
*உபசெயலாளர்:* திரு. மா. பரமலிங்கம் அவர்கள்
*பொருளாளர்:* திரு. சோ. சரவணமுத்து அவர்கள்

**நிர்வாக அங்கத்தவர்கள்:**

திரு. ச. திருநாவுக்கரசு அவர்கள்
திரு. க. சபாரெத்தினம் அவர்கள்
திரு. க. நாகலிங்கம் அவர்கள்
திரு. மு. சச்சிதானந்தம் அவர்கள்
திரு. பா. நல்லலிங்கம் அவர்கள்
திரு. சி. சிவபாலன் அவர்கள்
திரு. மு. கந்தையா அவர்கள்
திரு. சி. நாகராசா அவர்கள்
திரு. நா. ஐயன் அவர்கள்

*கணக்காய்வாளர்:* திரு. வே. கணேசன் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம் பாடவியில்
பண்களிக் குங்குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக் கும்பச்சை வண்ணமுமாகி மதங்கர் குலப்
பெண்களிற் றோன்றிய எம்பெரு மாட்டிதன் பேரழகே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரின் உள்ளே!


| | | |
|---|---|---|
| முகவுரை | திரு. பே. கணபதிப்பிள்ளை | 4 |
| கோவில் வரலாறு | அமரர் ஐ. ஆறுமுகம் புலவர் | 5 |
| ஆசியுரை | நல்லை ஆதீன பரமாசாரிய சுவாமிகள் | 6 |
| வாழ்த்துரை | செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி | 7 |
| ஆசியுரை | சிவஸ்ரீ ச. பா. வைத்தியநாத சிவாசாரியார் | 8 |
| ஆசியுரை | பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா | 9 |
| ஆசியுரை | கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் | 10 |
| வாழ்த்துரை | பிரம்மஸ்ரீ மா. த. ந. விரமணி ஐயர் | 11 |
| ஆசிச்செய்தி | திரு. தம்பையா குலசேகரம் | 12 |
| வாழ்த்து | திரு. சி. சோ. சந்திரசேகரம் | 15 |
| ஆசியுரை | திருமுருகமாமணி ஆ. தியாகராசா | 16 |
| ஆசியுரை | திரு. சடாட்சர சண்முகதாஸ் | 14 |

அன்னையின் இணை அடிகளுக்கு ஓர் அழகு மலர் திரு. நா. க. சண்முகநாதபிள்ளை 13

கும்பாபிஷேக முறைகளும் விளக்கமும் 17
சிவஸ்ரீ ச. பா. வைத்தியநாத சிவாச்சாரியார்

அம்பிகையின் கடைக்கண் 25
சிவ. வை. நித்தியானந்த சர்மா

தேவி உபாசனை 27
ஸ்ரீ மருதநமசிவாய தேசிகர்

சாதனத்தின் பெருமை 29
திரு. வே. ச. சுப்பையா

அம்பிகை வழிபாடும் சமயத்தொண்டும் 31
திருமதி சு. சரஸ்வதி

தெய்வீகத்தை நாமும் உணரலாம் 32
பண்டிதர் தி. பொன்னம்பலவாணர்

அன்னை பராசக்தி 33
திரு. க. ஆறுமுகம்

எழுமங்கை நாச்சிமார் பேரில் கோலாட்டக் கும்மி 35
அமரர் ஐ. ஆறுமுகம்

அனலையூர் எழுமங்கை நாச்சிமார் கோயில் 36
திரு. பி. சுந்தரம்

எழுமங்கை நாச்சிமார் பதிகம் 37
அமரர் ஐ. ஆறுமுகம்

நேரமும் வேகமும் 41
திரு. வே. கணேசன்

ஸ்ரீ மனோன்மணி திருவூஞ்சல் 43
பிரம்மஸ்ரீ மா. த. ந. வீரமணிஐயர்

வழிபடுநர் சபை 48
திரு. வே. கணேசன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# முகவுரை

மாதா பராசக்தி வையமெல்லாம் நீ நிறைந்தாய்
ஆதாரம் உன்னையல்லால் யாரெமக்குப் பாரினிலே.
ஏதாயினும் வழி நீ சொல்வாய் எமதுயிரே
வேதாவின் தாயே மிகப்பணிந்து வாழ்வோமே.

சைவமும் தமிழும் தனித்து அரசோச்சும் புண்ணிய பூமியாம் அனலையம்பதியில் உள்ள பத்திற்கு மேற்பட்ட ஆலயங்களிலே எழுவடிவயலில் எழுந்தருளி அருள்சுரக்கும் எழுமங்கை நாச்சிமார் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயமும் ஒன்றாகும். கர்ணகதைகளின் படியும் திரு. முத்துக்குமாரசாமிப் புலவர் போன்றோரின் ஆராய்ச்சிகளின்படியும் இவ்வால யந்தான் அனலையம்பதியின் முதல் ஆலயமாகும். இவ்வாலயம் ஆதியில் ஓர் சிறு கொட்டிலாக இருந்து தனிப்பட்ட அன்பர்களினாலே நிர்வகிக்கப்பட்டு வந்தது. பின்பு 23-10-72ம் திகதி தொடக்கம் பொதுமக்களினால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு பரிபாலன சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. காலத்திற்குக் காலம் சிறுசிறு திருப்பணிகளை அடியார்கள் செய்து வந்தார்கள். அடியார்களின் உள்ளத்திலே அம்பிகைக்கோர் அழகான ஆலயத்தை அமைக்கவேண்டுமென்ற பேரவாவினை நிறைவேற்றும் நோக்குடன் எமக்குமுன் கடமை யாற்றிய பரிபாலன சபையினர் 7-2-83ல் நாபி தளத்துடன் கூடிய ஆலயத்தினை அமைப்ப தற்காக அத்திவாரமிட்டு தமது அயராத உழைப்பினால் அம்பிகைக்கு சிற்பவேலைப்பாடுக ளுடைய அழகிய தூபியையும் மகா மண்டபம், அர்த்தமண்டபம், மற்றும் கொட்டகை போடு வதற்கான தூண்களையும் கட்டிஎழுப்பி தற்போதைய பரிபாலன சபையாரிடம் 20-8-86ல் ஒப்படைத்தனர். அம்பாளின் கருணையினாலும் அடியார்கள் வாரி வாரி வழங்கிய நிதியினாலும் பரிபாலனசபை உறுப்பினர்களின் விடா முயற்சியினாலும் சகல பரிவார மூர்த்திகளையும் உள்ளடக்கிய ஓர் அழகிய ஆலயத்தினைக் கட்டி எழுப்பி விபவ வருடம் ஆனி மாதம் 13ம்திகதி திங்கட்கிழமை(27-6-1988)இன்று கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. இந்தமங்கள நாளினை இன்றும் என்றும் உள்ளவர்கள் மறவாது நினைவில் கொள்வதற்காக இம்மலரை வெளியிட்டு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் திருவடிகளில் சமர்ப்பிக்கின்றோம்.

அருள்நிறைந்த இந்த அறிவமுதத்தைத் திவ்விய பிரசாதமாகக் கருதி அம்பிகை அடியார்கள் அனைவரும் பெற்று அனுபவிக்கவேண்டும். அறிவுடைச் சான்றோர்கள் அருள் விருந்தையும் அறிவு விருந்தையும் இம்மலரில் தேனாகச் சொரிந்துள்ளார்கள். யாபேரும் வண்டுகளாக உட்புகுந்து இம்மலரைக் குடைந்தாடி மதுவுண்டு மாந்தி மகிழும்படி எல்லாம் வல்ல ஆதிபராசக்தியை நினைந்து பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

வணக்கம்

இங்ஙனம்
**பே. கணபதிப்பிள்ளை**
**செயலாளர்**

எழுமங்கை நாச்சிமார்
ஸ்ரீ மனோன்மணி அம்பாள்
தேவஸ்தான பரிபாலன சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
அனலைதீவு

# எழுமங்கை நாச்சிமார் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோயில் வரலாறு

அமரர் ஐ. ஆறுமுகம் புலவர், அனலைதீவு

ஈழத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்மேற்குத் திசையில் சமுத்திர மத்தியில் அமைந்துள்ள அனலைதீவு சகலவளங்களும் பொருந்திய ஊர். பண்டுதொட்டுச் சைவ சமய ஆசார அநுட்டானங்கள் உடையோர் வாழும் புண்ணியபூமி. இங்குள்ள ஆலயங்களில் எழுமங்கை நாச்சிமார் கோயிலும் மிகமுக்கியமான அருட்தன்மை பொருந்தியது. இங்கே எழுமங்கை நாச்சிமார் என்னும் மனோன்மணி அம்பாள் எழுந்தருளியிருந்து அடியார்களுக்கு விரும்பிய இஷ்டசித்திகளைக்கொடுத்து அருள்பாலிக்கின்றார். இவ்வாலயத்தின் பின்பக்கம் அரசும் வேம்பும் ஒன்றாக இணைந்து வளர்ந்து சிவனும் சக்தியும்போல் காட்சியளிக்கின்றது. இது மனதுக்கு ஆனந்தத்தைத் தரவல்லது. இங்கு ஆண்டுதோறும் பொங்கல் திருநாள் மிகவிஷேடமாக நடைபெறும். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அபிடேகம், பொங்கல் நடந்துகொண்டேயிருக்கும். நவராத்திரி, சிவராத்திரி, திருவெம்பாவை முதலியன விசேட திருநாட்களில் அலங்காரமாக நடைபெறும். எவ்விதமான தீராத நோயாளர்களும் வந்து நோன்பிருந்து பூசை நைவேத்தியம் செய்வித்து அம்பாளின் பிரசாதத்தை உண்டவுடன் தீராத நோய்கூட நீங்கிவிடுகிறது.

13ம் நூற்றாண்டின் முற்பகுதியில் அனலைதீவில் குடியேற்றம் குறைவாக இருந்தது. அப்போது இக்கோயில் அமைந்திருக்கும் அரசம்புலம் என்னும் காணியும் அதைச்சுற்றியுள்ள இடங்களும் திருத்தப்படாமல் காடாயிருந்தது. இதைத்திருத்த வயல்நிலமாக்க எண்ணி காட்டை வெட்டி அழித்தார்கள். அப்போது இக்கோயில் இருக்குமிடத்தில் ஒரு பெரிய எழுமரம் நின்றது. அந்தமரத்தை வெட்டியபோது இரத்தம் ஆறாகப் பெருக ஆரம்பித்தது. அதைக்கண்டு பயந்து அம்மரத்தை வெட்டாது விட்டுவிட்டு வெட்டுக் காயத்திற்கு மருந்துவைத்துக் கட்டினார்கள். அதன்பின் அம்மரத்தினை மக்கள் எல்லோரும் தெய்வீக மரமென்று விளக்குவைத்து வழிபட ஆரம்பித்தார்கள். பின்னர் இவ்விடத்தில் தேவகன்னியர்கள் ஏழுபேர் நின்றுவிளையாடியதைப் பலர் கண்டுள்ளனர். இக்காரணங்களால் இக்கோயில் எழுமங்கை நாச்சிமார் கோயில் எனக் கர்ணபரம்பரையாக வழங்கி வருகிறது.

தற்போது ஊரவர்களால் நியமிக்கப் பெற்ற நிருவாக சபையார் இக்கோயிலை திறம்படப் பரிபாலித்து வருகிறார்கள் கோயில் கட்டிடங்கள் செவ்வனே அமைத்து இரண்டு காலம் நித்திய பூசை நடக்கச்செய்து திருத்தமான முறையில் கிரியைகள் நடைபெறுகின்றன. இக்கோயிலில் அருட்திறன்களும் அற்புத நிகழ்ச்சிகளும் இன்றும் நடந்துகொண்டு இருக்கின்றது.

அகண்ட பரிபூரண சச்சிதானந்த சிதாகாசசின்மய தேசோரூபியாய்ச் சகளீகரித்து அகிலலோக சராசரங்கள் அனைத்தையும் பெருது பெற்ற மாதாவாகிய பராசக்தி "எழுமங்கை நாச்சிமார்" இந்தத் திருக்கோயிலில் சாந்நித்தியமாய் எழுந்தருளியிருந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கின்றார். ஆகையால் இந்த ஆலயத்தைத் தரிசித்து வணங்கி இஷ்டசித்திகளைப் பெற்று இன்புற்றிருப்பீர்களாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்

# சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளின்

## ஆசியுரை

சிவநேயச் செல்வர்களே,

அனலைதீவு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் நிகழவிருப்பதறிந்து பெருமகிழ்ச்சி யடைகிறோம். ஆலயங்களில் பல்லாண்டுகட்குப் பின்னர் எடுக்கப்படும் பெருவிழா இதுவேயாகும். சக்தியின்றேல் சிவமில்லை. எனவே அம்பாளுக்கு நாமாற்றும் கைங்கரியங்களெல்லாம் அதிஉயர் உறுஸ்தானம் பெறும். தாயன்புக்கிணை ஏது. எல்லாப் பிழைகளையும் பொறுத்துக் கருணைபாலிக்கும் அவளின் திருவடிகளை இறுகப் பிடித்துக்கொண்டால் எல்லாச் சம்பத்துக்களும் கைகூடும். குடமுழுக்கு என்னும் இப்பெருவிழா மூலமூர்த்தியின் அருட்பிரவாகத்தை பொங்கியெழச் செய்யும். அடியார்களுக்கு அரிதில் காணக் கிடைக்கும் தரிசனம் இதுவே.

இவ்விழாவைச் செவ்வனே நிறைவுறச்செய்யும் சிவாச்சாரியப் பெருமக்களையும், ஆலயபரிபாலன சபை அன்பர்களையும், ஒற்றுமையுடன் ஒத்துழைப்பு நல்கிய அவ்வூர் மக்களையும், அயராது தொண்டுகள் புரிந்த அடியார்களையும் பொருளுதவி புரிந்த அன்பர்கள் அனைவரையும், சிற்பாசாரியார்களையும் இன்னும் வேண்டியவர்களையும் உளமார வாழ்த்துகிறோம்.

இவ்விழா செவ்வனே குறையாதுமின்றி நிறைவுற பராசக்தியின் பாதாரவிந்தங்களைத் தியானித்து எமது நல்லாசிகளை வழங்குகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## அனலைதீவு எழுமங்கை நாச்சிமார்
# ஸ்ரீ மனோன்மணி ஆலய குடமுழுக்கு விழா
# வாழ்த்துரை

மனிதன் ஒழுங்கான வாழ்க்கையை வாழ்வதற்கு வகுக்கப்பட்டதே சமயம் என்றும் திருவருளை முன்வைத்தே ஒழுங்கான வாழ்வை வகுத்துக் கொள்ளவேண்டிய கடமை ஒவ்வொருவருக்கும் உண்டு. மானிடப்பிறவி எடுத்தவர்கள் உணவால் மட்டும் வாழ்வதற்கு உரியவர்களல்லர். திருவருள் உணர்வாலேயே மானிடப்பிறவி மகிமையடைகிறது. இத்தகைய தெய்வ உணர்வுக்கு வழிகாட்டுவன ஆலயங்களே என்றால் மிகையாகாது. அன்பர்களின் இரட்சகி அம்பாள்; அவளே அகிலாண்டகோடி ஈன்ற அன்னை; எங்கள் துயர்துடைக்கும் கருணைக்கடலாக அவள் விளங்குகிறாள். எமது வாழ்வும் வழமும் அவளது அருளாணையின் கீழே நடைபெறுகிறது. இந்த நம்பிக்கை எமது நாட்டுச் சைவமக்கள் ஒவ்வொருவரிடமும் உண்டு. இதனாலேயே கொடுமைகளும் குளறுபடிகளும் மலிந்த இந்தக்காலத்தில் ஒரு சிலர் உண்மையும் உறுதியும் பூண்டு ஆலயங்களைப் பேணி அமைதியடைகிறார்கள்.

அனலைதீவு மக்கள் சைவசமயத்தை உயிராக மதிப்பவர்கள். சிவசின்னங்கட்கும் சிவாலயங்களுக்கும் அன்னதானம் போன்ற தர்ம கைங்கரியங்களுக்கும் மதிப்புக்கொடுப்பவர்கள். இந்த அடிப்படையிலேயே அனலைதீவு மனோன்மணி அம்பாள் திருப்பணி செம்மையாக நிறைவேறியுள்ளது. இவ்வாலயம் பழமையும், புதுமையும், அற்புதமும், பொங்கற் சிறப்பும் மிக்கது. தம்மை நம்பி வழிபடும் அடியார்களுக்குப் பெருங்கருணை பாலிக்கும் அன்னையாக இங்கு காட்சி தருகிறாள் அம்பிகை. அனலைதீவு மக்களின் கண்கண்ட தெய்வமாகவும் துதிக்கப்படுகிறாள். எனவேதான் இவ்வாலயத்துக்கென்று ஒரு நிருவாகசபை அமைத்து அனைத்து ஆலயக்கருமங்களையும் நிறைவேற்றுகிறார்கள். துன்பமும் துயரமும் நம்மைத் துரத்தும்போது நாம் இந்தத் தாயைத்தான் சரணடைய வேண்டும். "உழைக்கும் போது உன்னையே அன்னையே என்பன் ஓடிவந்தே", என்று பாடினார் பட்டர்பெருமான். ஆகவே நாமனைவரும் கோவிலையே தஞ்சமடைய வேண்டியவர்கள். இதனாலேயே அனலைதீவு மனோன்மணி அம்பாள் கோவில் அழகுற அமைக்கப்பட்டு 27-6-88 இல் குடமுழுக்கு நன்னீராட்டு விழா நடைபெறவிருக்கிறது. இவ்விழா சிறப்புற மனமாரத் திருவருளைத்துதித்து நிற்கிறேன்.

"துர்க்கா துரந்தரி"
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர்

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
தேவிமயம்

சிவாகம வித்யாபூஷணம், கிரியாரத்தினம்
**சிவஸ்ரீ ச. பா. வைத்தியநாத சிவாச்சாரியார்**
ஊரெழு
அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

"பெருக லாந்தவம் பேதமை தீரலாம்
திருக லாகிய சிந்தை திருத்தலாம்
பருக லாம்பர மாயதோ ரானந்தம்
மருக லானடி வாழ்த்தி வணங்கவே".

சிவத்தின் கருணையே அருட்சக்தி என்று ஆகமநூல் கூறுகிறது. அந்த அருட்சக்தி பிரபஞ்சத்தை இயக்கிக்கொண்டிருக்கிறது. பிரபஞ்சத்தில் உள்ள தாவர சங்கமப்பொருள்கள் யாவற்றிற்கும் அருட்சக்தி தாயாக விளங்குகிறது. சகல உயிர்களுக்கும் தாயாக விளங்கும் தேவிக்கு முதலில் "ஸ்ரீ மாத்ரே நம" என்று கூறி வழிபடுகிறோம். சொரூபத் திருமேனியாகிய இறைவனைத் தடத்தத் திருமேனியாக வேண்டுவதே கும்பாபிஷேகம். ஆன்மாக்கள் உய்யும்பொருட்டு ஆலயங்களை அமைத்து விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்து கிரியை நெறிகளை வழுவாது செய்து, சகல நலன்களையும் அதன்வாயிலாகப் பெறக்கூடியதாக அமைகிறது. அத்தகைய ஆலய மகா கும்பாபிஷேகத்தைத் தரிசிப்பது மானுடப்பிறவியின் பெரும் பயனாகும். அருள்மிகு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் புண்ணிய பூமியாகிய அனலையம்பதியில் எழுவடிவயலில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி அருள்பாலித்து வருகின்றாள். ஊருக்கு அழகு கோயில் என்பது முதுமொழி. ஆலயங்கள் பல அழகுசெய்ய விளங்குவது அனலையம்பதியாகும். அப்பகுதியில் உள்ள ஆலயங்களில் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம் மிகப் பெருமைவாய்ந்தது. எனவே இவ்வாலய மகாகும்பாபிஷேகம் திருவருள் முன்னிற்க சிறந்த வகையில் நடைபெறத் திருவருள் கூட்டியுள்ளது. பூரண கிருபையுடன் பொலிவுறும் இவ்வாலய மகா கும்பாபிஷேகத்தைக் கண்டுகளிக்கப் பேரார்வத்துடனிருக்கும் தொண்டர்கள், நிர்வாக அன்பர்கள், பொருளுதவிய தர்மசீலர்கள் யாவருக்கும் இந்த நந்நாளில் எல்லாம் வல்ல ஸ்ரீ மனோன்மணி அம்பாளின் திருவருளால் சகல நலன்களும் பெற்று இனிது வாழும்வண்ணம் அம்பிகையை வேண்டி நல்லாசி கூறுகின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவாகம பூஷணம் - கிரியா ரத்தினம்

**சிவஸ்ரீ ச. பா. வைத்தியநாத சிவாசாரியார் அவர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சக்தி துணை

நல்லைக் குருமணியின் பிரதம சிஷ்யன், முத்தமிழ் மாமணி

## பிரம்மஸ்ரீ சிவ வை. நித்தியானந்தசர்மா [ஆசிரியர்]

அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

"தையல் நல்லாளைத் தவத்தின் தலைவியை
மையலை நோக்கு மனோன்மணி மங்கையைப்
பையநின் றேத்திப் பணிமின் பணித்தபின்
வைய பவமணி மேவகி லாகவே."

அகிலலோக அன்னை பராசக்தியின் திருவருளே தம்மைச் சரணடைந்தவர்களையும் துதிப்பவர்களையும் துக்கசாகரத்திலிருந்து தூக்கி எடுத்து இன்பக்கடலில் ஆழ்த்தி எழில் கொடுத்து அதாவது இம்மையில் சகல செல்வங்களையும் சீரியவாழ்வையும் கொடுத்து மறுமைக்கு ஈடேற்றச் செய்கின்றது. இச்சக்தியானவள் எம்பெருமானது பஞ்சகிருத்தியங்களுக்கும் துணைவியாய், எள்ளில் எண்ணெய்போலும், மணியில் ஒலிபோலும், மலரில் மணம் போலும், தீயிற் சூடுபோலவும் இருந்து நடாத்திவருகின்றாள். பூவுலகின்கண்ணே பிறந்த மக்கள் தாம்தாம் செய்த தீவினைகளை நீக்கி நல்வினைப் பயனை அடைந்து இஷ்டசித்திகளைப் பெற்று உய்வதற்காகவே தொன்றுதொட்டு எல்லா இடங்களிலும் ஆலயங்களை அமைத்து விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்து நித்தியம், நைமித்தியம், காமியம் என்ற முறையில் கிரியை நெறிகளை வழுவாது செய்து வழிபாடுகளைச் செய்து சகல நன்மைகளையும் அதன் வாயிலாகப் பெறக்கூடியதாக அமைகிறது. ஆகவே இப்படியான மகா கும்பாபிஷேகத்தைக் கண்டு தரிசிப்பது மகாபுண்ணியமாகும். ஈழத்திருநாட்டின் சிகரமென விளங்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தது அனலையம்பதியாகும். இப்புண்ணிய பூமியில் அருள்மிகு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் எழுவடிவயலில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி அருள்பாலித்து நல்லருள் புரிகின்றாள். இத்திருக்கோயில் திருப்பணிகள் அன்பர் பலருடைய முயற்சியால் இனிது நடைபெற்று மகாகும்பாபிஷேகம் நிகழ்வது அனைவரும் அறிந்தது. இத்திருப்பணியும் மகா கும்பாபிஷேகமும் எதிர்காலத்தினருக்கும் இனிது விளங்கும்படி ஓர் அழகிய மலர் வெளிவருவதும் நம் மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சியாகும். கருணைக்கடலாக விளங்கும் அன்னை ஸ்ரீமனோன்மணி அம்பாளின் திருவருளால் கும்பாபிஷேகம் இனிது நிகழ்க; இதில் பங்குபற்றும் எல்லோர்க்கும் குருவருளும் திருவருளும் பெருகுவனவாகுக. மேலும் தேவஸ்தான சபையார் வெளியிடும் மலரும் சிறப்பாக மக்களின் உள்ளங்களில் பதிந்து மலரவேண்டும் எனவும் தர்மம் வேதநெறி சமயம் வளரத் திருவருள் பொலியவேண்டுமெனவும் அருள்மிகு ஸ்ரீ மனோன்மணி அம்பாளின் பாதகமலங்களைப் பிரார்த்தித்து நல்லாசி கூறுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

இப்பிரபஞ்சத்தின் நிகழ்வுகள் அனைத்தும் அம்பிகையின் பேராற்றலுக்குட்பட்டவை. எனவே அவள் பராசக்தி என ஆராதிக்கப்படுகின்றாள். அவளது பேராற்றலை அவரவர் அனுபவத்திற்கேற்ப பல்வேறு வடிவங்களில் வழிபடும் முறை எமது சமயமரபில் உள்ளது. பராசக்தி, மனோன்மணி, புவனேஸ்வரி, ஸ்ரீ லலிதா திரிபுரசுந்தரி, துர்க்கை, நாராயணி, லக்ஷ்மி, சரஸ்வதி போன்ற பல்வேறு நாமங்களால் அவளை ஆராதிக்கின்றோம். இவளது தெய்விகப் பெருமைகளை ஸ்ரீ தேவி பாகவதம், ஸ்ரீ தேவி மஹாத்மியம், சௌந்தர்யலஹரி, ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம் போன்றவை விதந்தோதுகின்றன.

உலகில் உள்ள உயிரினங்களின் உயிர்த்துணையாக விளங்கும் அம்பிகை அனலைதீவில் ஸ்ரீ மனோன்மணியாகக் கோயில் கொண்டெழுந்தருளுகின்றாள். அம்பிகைக்கு நவகுண்டயாக அநாவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் (27 – 6 – 88) அன்று நிகழ்வது நாம் செய்த தவப்பேற்றினாலாகும் எனில் மிகையில்லை. இத்தெய்வீக நிகழ்ச்சிஅனைவரது உள்ளங்களிலும் ஆனந்தத்தைப் பெருகச்செய்து உள்ளொளியையும் பெருக்குவதாகும்.

எழுவடிவயல் எழுமங்கை நாச்சிமார் என்ற திருநாமத்தைக் கொண்டு அடியார்களின் வழிபாட்டையும் ஆராதனைகளையும் ஏற்று அருள்பாலிப்பவள் இன்று ஸ்ரீ மனோன்மணியாகத் திருநாமம் பெற்றுத் தெய்விகக்காட்சி தருகின்றாள். அவளது அருளாட்சி எங்கணும் நிலவி எம்மை உய்விக்கின்றது. இது நாம் பெற்ற பிறவியின் நற்பயனே

சக்தியே சிவம்; சிவமே சக்தி எனப் போற்றுவது எம் சமயம். ஒரேமெய்மையின் இருகூறுகளே சிவசக்தி. இந்நிலையை இறைவனது அர்த்தநாரீசுவரர் என்ற மாதொருபாகனைத் தோன்றும் வடிவம் வெளிப்படுத்தும். மணிவாசகப் பெருந்தகை "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே" என்று அம்மையை முதலில் விதந்தோதியுள்ளார். சொல்லும் பொருளும் போன்று சிவசக்தி இணைந்துள்ள இந்நிலையை இத் தலத்திலே திகழும் அரசும் வேம்புமாகிய இரு விருட்சங்களும் வெளிப்படுத்துகின்றன.

அம்பிகையின் ஆலயத்தை மீண்டும் புதுப்பித்து கும்பாபிஷேகம் நிகழ்த்துதல் பெரும் சிவபுண்ணியமாகும். திருக்கோயில் முதலியவை அழிந்தால் அவற்றை முன் போலச் செய்தவர் பெறும் பயன் அவற்றை முன் செய்தவர்கள் பெறும் பயனிலும் ஆயிரம் மடங்கு அதிகமாகும். எனச் 'சிவபுண்ணியத் தெளிவு' என்ற நூல் சிறப்பித்துக் கூறும். 'உய்வாருதவு நிதி வாங்கித் திருப்பணி செய்வார் பெறுக சிவம்' என்பது சைவசமய நெறியின் வாக்கு. இம்மரபுக்கேற்ப அனலைதீவு வாழ் சைவப் பெருமக்கள் அம்பிகையின் திருப்பணிக் கைங்கரியத்தை அவளருளால் முட்டின்றி இனிதே நிறைவு செய்து அம்பிகையின் பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகத்தைக் காணும்பேறு பெற்றுள்ளனர். அதனையொட்டி மலரும் இக்கும்பாபிஷேக மலரின் கண்ணே இடம் பெறும் சிரிய சமய சிந்தனைகள் யாவரிடத்திலும் பதிந்து சமய வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைவதாகுக.

அம்பிகையின் ஆலயத்தில் நித்திய நைமித்திகக் கிரியைகள் இடையீடின்றித் தொடர்ந்து நிகழ்ந்து அடியார்கள் சீரும் சிறப்பும் பெற்றுப் பெருவாழ்வு வாழும் வண்ணம் அம்பிகையின் பொற்பாதங்களைப் பிரார்த்திப்போமாக.

"ஸர்வ மங்கள மாங்கல்யே சிவே! ஸர்வார்த்த ஸாதிகே!
சரண்யே திரியம்பகே கௌரி நாராயணி நமோஸ்துதே!!

சுபம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
யாழ்ப்பாணம்
27 - 6 - 1988.

கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்
தலைவர், இந்து நாகரிகத்துறை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

அனலைதீவு எழுவடிவயல் - எழுமங்கை நாச்சிமார் ஸ்ரீ மனோன்மணி அம்பாளுக்கு அடியார்கள் பக்திபூர்வமாக கும்பாபிஷேகம் செய்வதறிந்து பெருமகிழ்ச்சி கொண்டேன். அருள்வடிவாகிய அன்னை ஸ்ரீ மனோன்மணி அம்பிகை, தனது குழந்தைகளாகிய பக்தர்களை என்றென்றும் காப்பாற்றி வந்திருக்கிறுள் என்பது கண்கூடு. சைவநாடாகிய அனலைதீவு, பல தமிழறிஞர்களையும், புலவர்களையும், கலைஞர்களையும், சிறந்த பக்திமான்களையும், ஆசார சீலர்களையும், இவ்வுலகத்திற்குப் பெருமையுடன் அளித்த புண்ணிய நாடு. இத்தகைய பெருமைக்குக் காரணம், தெய்வ பக்தியே. சிவபதியாகிய அனலைதீவில் எழுமங்கை நாச்சிமார் என்றும், மனோன்மணி அம்மையின் திருத்தலமான எழுவடிவயல் க்ஷேத்திரத்தில் அர்த்தநாரீஸ்வர வடிவத்தில் அரசு வேம்பு ஆகிய விருக்ஷங்கள், தழுவிநிற்கும் பாங்கு, இந்த க்ஷேத்திரத்தின் அற்புதமான புனித தத்துவத்திற்கும் தெய்வீகத் தன்மைக்கும் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இதுமட்டுமல்ல எழுமங்கை நாச்சிமாரான ஸ்ரீ மனோன்மணித்தாயின் அருளால் தீராதபிணி யாவும் தீர்ந்துவிடுகின்றன. அருள்தந்து ஆட்கொள்ளவந்த அம்பிகையை ஆராதித்து, போற்றித்துதிக்கும் அனலைதீவு மக்கள் புண்ணியப் பெரும்பேறு பெற்றவர்கள். இவர்கள், மிகுந்த பக்தியுடன் எடுக்கும் குடமுழுக்குப் பெருவிழா, மனோன்மணித்தாயின் பூரண ஆசியுடன் இனிது நிறைவேற வேண்டுமென்று அன்னையின் பாதார விந்தங்களைத் துதித்துப் பிரார்த்திக்கிறேன்.

இணுவில், மா. த. ந. வீரமணிஐயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோவில் அறங்காவல் சபையின் தலைவரும் யாழ் செயலகம் உதவி அரசாங்க அதிபரும் பொதுசனத் தொடர்பு அதிகாரியுமான

# திரு. தம்பையா குலசேகரம் அவர்களின் ஆசிச்செய்தி

அனலைதீவு எழுவடிவயல் ஸ்ரீ மனோன்மணி அம்பாளின் மகா கும்பாபிஷேக விழாவையொட்டி, விழாச்சபையார் வெளியிட விருக்கும் மலருக்கு அச்சபையின் திரு. செல்லையா அவர்களின் கேள்விப்படி இச்செய்தியை அதிக மகிழ்ச்சியுடன் அனுப்புகின்றேன்.

எழுவடிவயல் ஸ்ரீ மனோன்மணி அம்பாள், கோவில் தொன்மையும் கீர்த்திமிக்க ஆலயமுமாகும். பழமை வாய்ந்த ஆலயங்களை க் காலத்துக்குக் காலம் புனருத்தாரணம் செய்ய வேண்டியது எமது கடமையாகும். இந்த வகையில், இன்றைய நெருக்கடி மிக்கசூழ் நிலையிலும், இவ்வாலய பரிபாலனசபையினர், "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்" என்ற கருத்தோடு, "எம் கடன் பணிசெய்து கிடப்பதே" என எண்ணியவராகி, பல இலட்ச ரூபா செலவில், இவ்வாலயத்தைப் புனருத்தாரணம் செய்து மகா கும்பாபிஷேகம் செய்ய திருவருள் கூட்டி இருப்பதை அறிந்து மிக வும் சந்தோஷப்படுகிறேன்.

அம்பாளின் அருளால் கும்பாபிஷேகம் இனிதே நடந்தேறி, மண்டலப் பூர்த்தியும் சிறப்புடன் நடந்தேற எல்லாம் வல்ல ஜெகன் மாதா, இப்பணியில் ஈடுபட்ட அனைவர்க்கும் அருள் சுரந்தருள்வா ளாக என வேண்டிக்கொள்கிறேன்.

வணக்கம்

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையின் இணை அடிகளுக்கு ஓர் அழகு மலர்

அனலைதீவு எழுவடிவயல் எழுமங்கை நாச்சிமார் என வழங்கும் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயக் குடமுழுக்கு நிகழ்வை முன்னிட்டு இச்சிறப்பு மலர் வெளிவருகிறது. திருப்பெருகு இம்மலருக்கு ஆசியுரை வழங்கவேண்டுமென்று அன்பர்கள் அடியேனையும் ஒரு பொருட்டாக எண்ணி வேண்டிக்கொண்டனர். அன்னையின் திருவருட்கடாட்சமும், சொல்லுக்கடங்காத அவளுடைய அருட்பெருங்கருணையும் - முன்னின்று வழி நடத்தியதனால், மனோன்மணி அம்பாளுக்குக் குடமுழுக்கும் - அதனால் அடியார்களுக்கு அருள் முழுக்கும் நிறைவேறியுள்ளது. அது ஒன்றே போதும். அவளுடைய ஆசியே நமக்கு வேண்டும்.

சக்தி ஒன்றேயாயினும், அது பல வேறு வடிவபேதங்களைப் பெற்று உயிர்கட்கு நலம் புரிகின்றது. இவ்வடிவங்களுள் மனோன்மணி வடிவம் பக்குவம் எய்திய உயிர்களை மலத்தினின்று நீக்கி சிவத்துடன் சேர்க்கும் தன்மையுடையதாகும். அந்தவகையில் மனோன் மணி அம்பாளுக்குக் குடமுழுக்குச் செய்தவர்கள் எய்தும் பேறு சொல்லும் தன்மையதன்று. அபிராமிப் பட்டர் அன்னையைத் துதிசெய்யும்போது

''கண்ணிய(து) உன்புகழ் கற்பது உன் நாமம் கசிந்து பத்தி
பண்ணிய(து) உன் இரு பாதாம் புயத்தில், பகல் இரவாய்
நண்ணிய(து) உன்னை நயந்தோர் அவையத்து நான்முன்பு செய்த
புண்ணியம் ஏது? என்னம்மே! புவி ஏழையும் பூத்தவளே.

(பாடல் 12)

என்று பாடுகிறார். ''என்மாதாவே இப்பிறப்பிலே நான் சிந்தித்தது உம்முடைய திருப்புகழையே. தமியேன் படிப்பது உம்முடைய திருநாமங்களையே. அடியேன் மனமுருகிப் பக்தி செய்தது உம்முடைய திருவடிகளையே, நாயேன் பகலும் இரவுமாகக் கூடியிருந்தது மெய்யடியார்களது கூட்டத்தையே. இதற்கு நான் முற்பிறவியில் என்ன புண்ணியம் செய்திருக்க வேண்டும். என்பது பாடலின் பொருள். சாதாரண மனிதர்களாகிய நாம் இப் பிறப்பில் என்ன செய்யவேண்டும் என்பதை அபிராமிப் பட்டர் வெளிப்படையாக உணர்த்துகிறார். இவ்வுலகில் இறைவிக்கு ஆலயம் அமைத்துக் குடமுழுக்குச் செய்யும் திருவருட் பேறு இருப்பதால், மனிதப்பிறவியும் வேண்டுவதே என்று போற்றுவோம்.

குடமுழுக்காகிய புண்ணிய கைங்கரியத்தை எண்ணியாங்கு நிறைவேற்றுவதற்குத் திண்ணியர்களாக இருந்து தம் நல் உழைப்பினை நல்கிய புண்ணிய சீலர்களுக்கு அன்னையின் அருளாசி என்றும் உண்டு.

அனலைதீவுக் கிராமம் அலைகடல் மத்தியில் நிற்கும் ஒரு சிவநெறிக் கிராமம்.

மண்வளமும் மனநலமும் பிறதிறனும் பெற்ற சிறப்புமிக்கது. பிறசமயத் திணிப்புக்கு எவ்வகையிலும் இடந்தராது 'சீரும் திருவும்' பொலிந்து நிற்பது இக்கிராமம், இவ்வூர் உயிர்த்துடிப்போடு இயங்குகின்றதென்றால் ஊரவர்கள் அங்குள்ள ஆலயங்களைப் பேணிப் பாதுகாப்பதே காரணமாகும்? திரைகடல் ஓடித் திரவியம் தேடுவோர், பிற நாட்டு வளங்கள் எல்லாவற்றையும் தமது கிராமத்தின் தெய்வீக மறுமலர்ச்சிக்கு உதவுவதை நான் அறிவேன். அந்த உணர்வு மேன்மேலும் வளர்வதாகுக.

இறுதியாக பகவான் ஸ்ரீ அரவிந்தரின் அருள்வாக்கோடு இவ்வுரையைப் பூர்த்தி செய்ய விரும்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ உண்மையான தெய்வத் தொண்டனுக விரும்பினுல், எல்லா ஆசையினின்றும், அகம்பாவத்தினின்றும் முற்றிலும் விடுபடுவது உனது முதல் நோக்கமாயிருக்கவேண்டும். உனது வாழ்வனைத்தும் பரமனுக்கே நிவேதனமும், வேள்வியுமாகவேண்டும். பணி செய்து, ஏற்று, நிறைவேற்றி, தெய்வசக்தியின் காரியங்களில், அவளுடைய திருவிளக் கக் கருவியாக இருக்கும் குறிப்புடனேயே நீ செயல் புரியவேண்டும். உனதிச்சைக்கும், அவளிச்சைக்கும் எவ்வகை வேற்றுமையும் இருக்கக்கூடாது. அவளுடைய பிரேரணைதவிர உன்னுள் வேறு சங்கற்பம் இருக்கக்கூடாது. உன்னுள் உன்னுல் அவர் அறிந்து செய்தும் செய லன்றி வேறு செயலிருக்கக்கூடாது — நீ அவ்வளவு தூரம் கடவுள் உணர்வில் பக்குவம் அடையவேண்டும்" (அரவிந்தர்)

"மூர்த்திகள் மூன்று பொருள் ஒன்று — அந்த
மூலப் பொருள் ஒளியின் குன்று
நேர்த்தி திகழும் அந்த ஒளியை — எந்த
நேரமும் போற்று சக்தி என்று — (பாரதி)

**நா. க. சண்முகநாதபிள்ளை** B. Sc. Dip. in Ed.
S. L. E. A. S.
கொத்தணி அதிபர், நயினுதீவு.

# ஆசியுரை

சைவமும் தமிழும் சிறப்புற்று விளங்கும் அனலைதீவுக் கிராமத்தில் எழுந்தருளி, அருள்பாலிக்கும் அருள்மிகு எழுமங்கை நாச்சிமார் ஸ்ரீ மனேன்மணி அம்பாள் ஆலயத் திருப்பணிகள் செவ்வனே நிறைவேறி 27 - 06- 1988ல் மகா கும்பாபிஷேகமும் நடைபெற இருப்பதில் மட்டில்லா மகிழ்வெய்துகின்றேன்.

அம்பிகை வழிபாடு அநாதியானது. யாவற்றையும் இயக்கும் மகாசக்தியின் ஆற்றலை உணர்ந்த முன்னேரால் எமக்கு வழங்கப்பட்ட சக்திவழிபாட்டுப் பாரம்பரியத்தின் ஒரு வடிவமே "நாச்சிமார் கோயில்" வழிபாடாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் அதனையடுத்துள்ள பல் வேறு தீவுகளிலும் ஆங்காங்கே நாச்சிமார் கோயில்கள் பலஅமைந் துள்ளன. இவ்வாறுன ஆலயங்களிலொன்றுக அனலைதீவு அருள்மிகு நாச்சிமார் ஆலயமும் அமைந்துள்ளது அனலைதீவின் அருள்மிகு ஐயனுர் ஆலயம் புளியந்தீவு அருள் மிகு நாகதம் பிரான்ஆலயம் என்பனவற்றிற்கும் போலவே இவ்வாலயத்துக்கும் அதன் அறங்காவலர்களும், அடியார்களும் முயற்சியெடுத்துத் திருப்பணிகள் செய்து மகாகும்பாபிஷேகமும் செய்வது இக்கிராமத்துக்கு எல்லாம் வல்ல அம்பாளின் நல்லருள் வற்றுது பொலிவதற்கு வாய்ப் பாகும்.

சக்தி அருளால் கும்பாபிஷேகம் சிறப்புற நடக்கவும் விழா மலர் அழகும் பயனும் உடைய்தாயப் பொலிவுறவும் பிரார்த்திக்கிறேன்.

**சி. சடாட்சர சண்முகதாஸ்**
உதவி அரசாங்க அதிபர்,
தீவுப்பகுதி தெற்கு.

வேலணை
29 - 05 - 88



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# வாழ்த்து

அனலைதீவு எழுவடிவயல் எழுமங்கை நாச்சிமார் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் இவ் அழகிய சிறிய தீவின் நடுப்பகுதியில் பேரும்புகழும் கொண்ட ஐயப்பனையும், சங்கரநாதர் கணபதிப்பிள்ளையார், புளியந்தீவு எனும் பெயருடன் அடங்கிய நாகதம்பிரான் என புகழுடன் அமைந்திருக்கும் நடராசப் பெருமானையும், அம்மன், வைரவர், முருகன், வீர பத்திரர், போன்ற பல்வேறு ஆலயங்களின் மத்தியிலே பொருக்கடி என்று சிறப்புப் பெற்ற கடுஞ்சுவை கொண்ட வயல்நடுவே ஸ்ரீ மனோன்மணி ஆலயம் இன்று எல்லா வேலைகளும் பூரணமடைந்த நிலையில் மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளதை எண்ணி மட்டற்ற மகிழ்வு கொள்கின்றேன். அன்னை மனோன்மணி அம்பாள் தனது பிள்ளைகளாகிய அடியார்களை என்றென்றும் காப்பாற்றி வருகின்றாள் என்பதை நாம் தினமும் காணக் கூடியதாக உள்ளது: அம்பிகையின் ஆலயம் இத்துணைச் சிறப்புப் பெற பக்தர்கள் வாரி, வாரி வழங்கிய பொருளுதவி, சரீரஉதவி என்பன முக்கியத்துவம் பெறுகின்றது. இக்கிராமத்தில் அம்பிகையின் அருளால் பல்வேறு தரப்பட்ட அறிஞர்களையும், கல்வி மான்களையும் பெருமையுடன் படைத்த கிராமம் இது. எமது மக்கள் எல்லோரும் சேர்ந்து அம்பிகைக்கு எடுக்கும் குடமுழுக்கு விழாவில் இருந்து எமது கிராமம் விருட்சமடைகின்றது. இப்பெருவிழாவைச் சிறப்புற நடாத்துவது மட்டுமல்ல ஸ்ரீ மனோன்மணி அம்பாளின் கும்பாபிஷேக ஞாபகச் சின்னமாக ஓர் மலர் வெளியீட்டினை செய்வதில் பெருமை கொள்கிறேன். இதற்காக ஆலய பரிபாலன சபையினர் என்னையும் ஒரு அன்பராக எண்ணி ஆசியுரை தரக் கேட்டுக் கொண்டதை எண்ணி பெருமகிழ்வு கொள்கின்றேன். எழுமங்கை ஸ்ரீ மனோன்மணி அம்பாளுக்கு குடமுழுக்கு செய்வதினால் அடியவர்கள் யாவரும் அருள்முழுக்குப் பெறுகின்றனர். அது மட்டுமல்ல இவ்ஆலயம் இக்கிராமத்தில் ஓர் வரப்பிரசாதமாக அமைவதற்கு ஆலய பரிபாலன சபையினரின் அயராத முயற்சியேயாகும். இவர்களுக்கு உறுதுணையாக அம்பிகையின் வழிபடுநர் சபையினரும் இணைந்து செயலாற்றுவதில் இருந்து இவ்வாலயம் இன்னும் சில குறுகிய ஆண்டுகளுக்கிடையில் அம்பிகைக்கு மகா கோபுரத்தினையும் அமைக்கும் வாய்ப்பும் அமையும் என எண்ணுகின்றேன். அனலை மக்கள் மிகுந்த பக்தியுடன் எடுக்கும் குடமுழுக்குப் பெருவிழா பரிபூரண திருப்தியுடன் இனிது நிறைவேற வேண்டுமென அன்னையின் பாதாரவிந்தங்களைத் துதித்துப் போற்றுகின்றேன்.

சுபம்.

சி. சோ. சந்திரசேகரம்
கிராமசேவை அலுவலர், நயினாதீவு.

✳



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோவில் அறங்காவலர் சபையின்
கௌரவ செயலாளர் திருமுருகமாமணி

# ஆ. தியாகராசா அவர்கள் வழங்கிய
# ஆசிஉரை

அனலைதீவு எழுவடிவயல், எழுமங்கை நாச்சிமார் என வழங்கும் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய புனருத்தாரண சபையின் சார்பாக, கும்பாபிடேக மலருக்கு ஓர் ஆசிஉரை தருமாறு அன்பர் திரு. சோ. சந்திரசேகரம் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அவரின் அன்புப் பணிப்பின் பேரில் இவ்வாசியுரையை நல்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்சமு தாக்கிய அம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம்என் சென்னியதே.

இந்தக் கலியுகத்திற்கு உகந்த வழிபாடும் திருத்தொண்டும், எப்படியாக இருக்க வேண்டும் என யாம் அறிய விரும்புகிறோம் என்று நைமிசாராகிய முனிவர்கள் தம் குருவான சூதமா முனிவரைப் பார்த்துக் கேட்டார்கள். அவர்களின் கேள்விக்கு உத்தரமாக சூதர் பின்வருமாறு கூறினார்.

என் அன்புக்குரியவர்களே! இந்த கலியுகத்திற்கு உகந்த வழிபடு கூட்டு வழிபாடு, (நாம பஜனை) தொண்டு, மூர்த்தி தலம், தீர்த்தம் என்ற வகையில் தொன்மையான ஆலயங்களை மீளப் புதுப்பித்தல், திருப்பணிகள் செய்தல், நான்கு யுகங்களுக்கும், நான்கு விதமான வழிபாடுகளும், தொண்டுகளும் உண்டு. இந்த வகையில் கலியுகத்திற்கு உரியது இதுவே என்று கூறினார்.

இந்த சூதமா முனிவரின் திருவாக்குக்கு அமைவாக அனலைதீவு எழுவடிவயல் ஸ்ரீ மனோன்மணி அம்பாளின் ஆலயம், புனருத்தாரணம் செய்யப்பட்டு, பெரும் சாந்தி குடமுழுக்கு விழாவும் நடைபெற்று, மண்டலப் பூர்த்தியும் நிறைவுற்று, நினைவுமலரும் வெளிவர இருப்பதைப் பார்க்கும் போது, அப்பணியை மிகவும் சிறப்பாகச் செய்வதற்கு ஆலய பரிபாலன சபையினருக்கும், தொண்டு செய்யஉதவியவர்களுக்கும் அன்னையின் திருவருள் எந்த அளவு கைகூடி உள்ளது என்பது தெளிவாகின்றது. இவர்களின் ஆக்கமும் ஊக்கமும் போற்றப்பட வேண்டியதாகும். அன்னையின் குடமுழுக்கு விழாக்காண வந்தவர் யாவரும் பெரும் பாக்கியம் செய்தவர்களே. அந்த வகையில் "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற மனப்பான்மையில் இவ்வாலய பரிபாலன சபையினர் பணி புரிந்துள்ளார்கள். இவர்களுக்கும், இத்தொண்டு சிறப்புடன் அமைய உதவிய யாவற்கும் எல்லாம் வல்ல ஜெகன்மாதாவின் திருவருள் என்றென்றும் நிலைக்க வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

"என்கடன் பணிசெய்து கிடப்பதே"




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெல்வயலின் நடுவே ஸ்ரீ மனோன்மணி அம்பாள்
ஆலயத்தின் தோற்றம்.

University of Jaffna Sri Lanka
RECEIVED
1988 -10-28
Periodicals Division
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிறுவனரின் நினைவு ஞ மண்டபமும் அப்பர் ஆலயத்தின் தோற்றம்.



ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தில்
பரிவாரமூர்த்திகளாக எழுந்தருளியிருக்கும்
வள்ளி, முருகன், தெய்வயானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
தேவிமயம்

# கும்பாபிஷேக முறைகளும், விளக்கமும்

பிரதிஷ்டா பிரதமகுரு, சிவாகம வித்தியாபூஷணம், கிரியாரத்தினம்
**சிவஸ்ரீ ச. பா. வைத்தியநாத சிவாசாரியார், ஊரெழு.**

அநாதிமல முத்தராகிய சிவபெருமான் அநாதிமல பெத்தர்களாகிய ஆன்மாக்கள் மீதுகொண்ட கருணையினாலே அனுக்கிரகம் செய்ய சர்வதேவதா சுரூபமாகிய கும்பத்தில் பூசித்து அபிஷேகம் செய்தலே கும்பாபிஷேகமாகும். இதனைத் திருக்குடத் திருமஞ்சன அபிஷேகம் என்று கூறுவார்கள். இது நான்கு வகையாக ஆகமங்களில் கூறப்படும். இவை கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் முதலானவை. கர்ஷணம் என்பது நிலத்தை மட்டமாக்கி கோயில் கட்ட ஆயத்தங்களைத் தொடங்கும்பொழுது நிகழ்த்தப்படும் உழும் கிரியையாகும். பிரதிஷ்டை ஆவர்த்தனம் அனுவர்த்தனம் புனராவர்த்தனம் அந்தரீதம் என நான்கு வகைப்படும்.

தேவாலயங்கள் இல்லாத இடத்துத் தேவாலயங்களை ஆகம விதிப்படி புதியவையாக அமைத்து அங்கு இறைவனைப் பிரதிஷ்டித்தல் அநாவர்த்தனப் பிரதிஷ்டை எனப் பெயர்பெறும். இதற்கு 108 கிரியைகள் உண்டு. பன்னெடுங் காலத்திற்கு முன் நிர்மாணிக்கப்பட்ட தேவாலயத்தில் நெடுங்காலமாக நித்திய நைமித்தியங்கள் நிகழ்ந்துவரும் வேளை எதிர்பாராதவாறு காடுபடர்தல், மண்மாரி, தீபரவுதல் முதலியவை நிகழ்ந்து ஆலயம் மறைக்கப்பட்ட பொழுது அதனை வெளியாக்கியோ அல்லது முன்போல் தேவாலயம் ஒன்றைப் புதிதாக நிர்மாணித்தோ நிகழ்த்தும் பிரதிஷ்டை ஆவர்த்தனப் பிரதிஷ்டை எனப் பெயர் பெறும். இதற்கு 146 கிரியைகள் உண்டு. நித்திய நைமித்தியங்கள் நடைபெற்று வரும்வேளை விமானம், கோபுரம், மண்டபம், பிரகாரம், ஆலய விக்கிரகங்கள் ஆகியவற்றில் எவையேனும் வெடித்தோ பிளந்தோ கீலமடையின் பாலஸ்தாபனம் செய்து முன்போல அழகாகவும் பலம் வாய்ந்ததாகவும் அமைத்து பிரதிஷ்டை செய்வதனை புனராவர்த்தனப் பிரதிஷ்டை என நூல்கள் கூறும். இதற்கு 64 கிரியைகள் உண்டு,

சோரன், சண்டாளன், திருடர்கள் பிரவேசித்தல், மக்கள் எவரேனும் இறப்பினும் முதலானவைகள் நிகழ்ந்தால் உடனே செய்வதாம். இதற்கு நாள் நட்சத்திரம் பார்க்கத் தேவையில்லை. இதற்கும் 16 கிரியைகள் உண்டு.

அங்கிங்கெனாதபடி எங்கும் பரந்து விளங்கும் இறைவனை உருவத் திருமேனியில் தியானித்து ஆவாகித்து வழிபடவேண்டிய முறைகளை ஆகமநூல் விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக்கூறியிருக்கின்றது. அந்த உருவத்திருமேனியை வைத்து வழிபட வேண்டியதலம் எத்தகையதாய் அமைய வேண்டும் என்பதையும் ஆகம நூல் சிறப்பாகக் கூறியிருக்கின்றது. இறைவன் உருவத்திருமேனியில் நின்று அடியார்களுக்கு அருள்புரியும்தலம் ஆலயமாகும். அதனைப் பிரசாதம் தேவாயதனம் என்று பல பெயர்கள் கொண்டு அழைப்பதுண்டு. பொதுவாக ஆலயம் என்ற பெயரால் பெரும்பாலும் வழங்கப்படுகின்றது. ஆ + ஆன்மாக்கள்லயம் ஒடுங்குதல் என்று கருத்தாகும். ஆன்மாக்கள் இறைவன் சந்நிதியை அடைந்து பக்தியுடன் ஒடுங்கும் தன்மையைப் பெறுவதால் ஆலயம் என்று பெயர்வழங்கலாயிற்று. ஆ எங்கும் வியாத கும்பம், பிம்பம், தம்பம் முதலிய இடங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் மறைவாக அதிஷ்டித்து நின்று அருளுகின்றார் என்று இலக்கணமுறையாகவும் கருத்துக்கொள்ளலாம். விதிமுறையாக ஆலயத்தை அமைத்து அவரவர் விரும்பும் உருவத் திருமேனியைத் தாபித்துக் கும்பாபிஷேகம் செய்து வழிபட்டு வருவதை நாம் காண்கின்றோம். இந்தக் கும்பாபிஷேகத்தின் நிகழ்ச்சி ஒழுங்கு முறைகளை நாம் ஊன்றிக் கவனித்தோமானால் பல அடிப்படையான தத்துவக் கருத்துக்கள் நம் வாழ்க்கையில் காணக்கூடியதாய் இருக்கும். கும்பாபிஷேகம் தொடக்கம் முதல் முடிவுவரை நிகழ்ச்சிகளை எட்டுப் பெரும் பிரிவுகளாகக் காணலாம். அவற்றுள் முதலாவது வரித்தல் அனுமதி பெறல், பிரார்த்தித்தல் என மூன்று அம்சங்கள் கொண்டது,

## 1 (அ) வரித்தல்

ஒரு கும்பாபிஷேகத்தை நடத்தத் தக்க ஆசாரியாரைத் தேர்ந்தெடுத்தல். மனிதனுடைய வாழ்க்கை தெய்வப் பண்புடையதாய் அமையவேண்டுமானால் முதலில் தக்க குருவைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது இன்றியமையாததாகும். அது போலவே இறைவனைப் பிரதிஷ்டைசெய்யத் தகுதிவாய்ந்த சிவாசாரியார் ஒருவரை முதலில் தேர்ந்தெடுப்பது மிகமுக்கியமாகும். ஆசாரியர் நல்லொழுக்கமும் ஆகம சாஸ்திர அறிவும் பக்தியும் நிறைந்தவராய் இருக்கவேண்டும். சிவாசாரியருடைய தவவலிமையாலும் நித்திய நைமித்திய பூஜை முறையாக நடந்துவருவதாலும் உருவத் திருமேனியை நன்கு அலங்கரித்துத் தூய்மையாக வைத்திருப்பதாலும் விக்கிரகம் தெய்வத் தன்மையுடையதாய் விளங்குகின்றது என்று ஆகமசாஸ்திரம் கூறுகின்றது. அதில் சிவாசாரியருடைய தவவலிமையை முன்னதாக எடுத்துக் காட்டியிருப்பதால் கும்பாபிஷேகத்திற்கு முதலாவதாக ஆசாரியவர்ணம் செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

## 2 (ஆ)

ஆசாரியர் பாலாலயம் சென்று இறைவனிடம் தருணாலயத்தில் பிரதிஷ்டை செய்ய அனுமதி தருமாறு வேண்டுதல். இதனை தேவானுக்ஞை என்பர். அடுத்தது ஒழுக்கமும் சீலமும் பொருந்திய வேத மந்திரம் கற்றுணர்ந்த அந்தணர்களைக் கிழக்குமுகமாக மண்டபத்தில் அமரச் செய்து அவர்களுக்கு சந்தனம் தாம்பூலம் கொடுத்து மலரால் அர்ச்சித்து அவர்களிடம் அனுமதி பெறுவதாகும். கற்றுணர்ந்த சபையோர்களே இறைவனைப் பாலாலயத்திலிருந்து தருணாலயத்திற்குக் கொண்டுசென்று பிரதிஷ்டை செய்ய இறைவனிடம் அனுமதி பெற்றோம். அக் கிரியைகளில் மந்திரங்கள் விட்டுப்போகாமலும் கிரியைகள் மாறுபடாமலும் நடத்தித் தரவேண்டும். மேலும் எனக்கும் பிரதிஷ்டை செய்யக்கூடிய தகுதியையும் அருள வேண்டுமென்று ஆசாரியர் பிரார்த்திக்க அவர்களும் இறைவனிடம் பிரதிஷ்டா கர்மாவைச் செய்துமுடிக்க உமக்கு ஆற்றல உண்டாகுக என்று ஆசிகூறுவர். இதனை பிராமணானுமதி பெறல் என்பர்.

இறைவனைப் பிரதிஷ்டை செய்ய அந்தணர்கள் வாழ்த்து அனுமதி அவசியமா என்ற ஐயம் எழலாம். கண்ணன் கூறுகின்றான் இவ்வுலகம் இறைவன் அருளால் இயங்குகின்றது. அந்த இறைவன் எங்கும் வியாபித்திருக்கின்றான். ஆகாய வெளியிலும் கலந்து நிற்கின்றான். அவனை வழிபட்டு அவனருளைப்பெற உருவத்திருமேனியில் மந்திரம் கூறி ஆவாகித்துப் பிரதிஷ்டை செய்யப்படுகின்றது. ஆகவே அந்த, இறைவன் மந்திரத்துக்குட்பட்டவன். அந்த மந்திரம் அந்தணர்களால் கற்கப்பட்டு விளங்குகின்றது. மந்திரம் அந்தணர்களுக்குரியதாகின்றது. அந்த அந்தணர்கள் எனக்குப் போற்றத்தக்கவர்கள். ஏனெனில் எல்லா உயிர்களும் வழிபட்டு உய்ய உருவத் திருமேனியால் என்னை ஆவாகிக்கும் மந்திரம் அந்தணரிடம் உறைவதால் அவர்கள் எனக்குப் போற்றத்தக்கவர்கள் என்று வியந்துகூறினார். தாய் தந்தையர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்க்கையால் குழந்தை உண்டாகின்றது. அக்குழந்தை வளர்ந்து மனிதனுகின்றுன். என்ற நியதி அளவில் மட்டிலும் அவன் அந்தணனுகமாட்டான். தாய் தந்தையர் சேர்க்கையால் உதயமாகின்ற மைந்தனுக்குத் தூய்மை உண்டுபண்ணக்கூடிய சில கிரியை முறைகள் விதிக்கப்பட்டுள்ளன. குழந்தை பிறந்தவுடன் தங்கத்தை உரைத்து தேனில் கலந்து எல்லாத் தெய்வங்களும் உனக்கு நல்லறிவைக் கொடுக்கட்டும் என்று மந்திர வாழ்த்துக் கூறித் தந்தை மைந்தனின் நாவில் தடவுகின்றுர். பின் மூன்று வேதங்களின் சாரமான பிரணவத்தைக் கூறித் தயிரையும் மைந்தனின் நாவில் தடவுகின்றுர்.

வேதமந்திரம் கற்கத் தகுதியுள்ளவனுவாய் என்று வாழ்த்துக் கூறுகின்றுர். மேலும் இதுபோன்ற சில கிரியைகளால் அக்குழந்தை தந்தையின் இந்திரியத்தால் வரும் தோஷமும் தாயின் கற்பவாசத்திலுள்ள தோஷமும் நீங்கப்பெற்றுப் பரிசுத்தமாக விளங்குகின்றது. பின் ஏழாம்வயதில் வேதசாரமான காயத்திரியை தந்தை மகனுக்கு உபதேசிக்கின்றுர். அவன் முறையாக ஜபித்துவருகின்றுன். இதனுல் அவன் உள்ளம் தூய்மை அடைகின்றது. பின் குருவையடைந்து வேதத்தை முறையாகக் கற்கின்றுன். தாயின் கற்பவாசத்திலிருந்தே தூய்மைபெற்று வளர்ந்து வருகின்ற பாலகன் வேதத்தைக் கற்பதால் அந்த வேதம் சித்தியுடையதாக ஆகின்றது. ஆகவே அந்தணர் அனுமதி என்பது அவர்கள் உள்ளத்திலிருந்து வருகின்ற வாழ்த்து. அது வேத புருஷனின் வாழ்த்து அனுமதியாகும். ஆகவேதான் இரண்டாவதாகப் பிராமணனுக்கனு கூறப்பட்டுள்ளது.

## 3 (இ) பிரார்த்தித்தல்

எந்த ஒரு காரியத்தையும் இடையூறு இல்லாமல் நிறைவேற்ற விநாயகப்பெருமான் திருவருள்வேண்டும். காற்று, மழை, நெருப்பு முதலிய உற்பாதங்கள் நிகழாது மங்களகரமாகக் கிரியைகள் நிறைவேற நவக்கிரகங்களின் அருள்வேண்டும். ஆகவே கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம் இவ்விரண்டையும் சிவாச்சாரியர் செய்து முடிக்கின்றுர். இது பிரார்த்தனையாகும்.

## (ii) சுத்திகரித்தல்

எந்த ஒரு காரியத்தையும் செய்துமுடிக்கப் பொருள் இன்றியமையாதது. அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை. பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை என்ற முதுமொழியை யாவரும் அறிவர். சிவதர்மம் செய்துமுடிக்கப் பொருள் மிக முக்கியமானது. அந்தப் பொருள் தூய்மையுடையதாய் இருக்கவேண்டும். அதாவது நேர்மைவழியில் அப்பொருள் ஈட்டியதாய் அமையவேண்டும். சிவதர்மத்துக்காக ஈட்டிய பொருள் பலவழியாக வந்திருக்கக்கூடும் ஆகவே அப்பொருளைச் சுத்திகரித்தல் என்ற கிரியையைக் குரு நடத்துகின்றுர்.

சிவாஸ்திர மந்திர ஜெபம், ஹோமம் முதலியவற்றைச் செய்து கும்பநீரால் தெளித்துச் சுத்தமாக்கிப் பதினெரு பாகமாகப் பிரித்து எஜமானிடம் கொடுத்துச் சிவதர்மத்தைச் செய்து முடிக்குமாறு ஆசாரியர் தெரிவிக்கின்றுர். பொருளைச் சுத்திகரித்தபின் குரு தன்னையும் இறைவன் உறைவிடமான ஆலயத்தையும் சுத்திகரிக்கின்றுர். மதுபாகம் என்னும் கிரியையைச்செய்து ஆன்மசுத்தியைப் பெறுகின்றுர். நெய், தேன், பழம் இவைகளில் ஆன்ம தத்துவம், வித்தியா தத்துவம், சிவ தத்துவம் என்ற மூன்று தத்துவங்களையும் பூசித்து மதுபாகத்தை அருந்துகின்றுர் அறிந்தோ அறியாமலோ முற்பிறவியிலே சிவ நிந்தை, சிவசாஸ்திர நிந்தை, சிவனடியார் நிந்தை இவைகளைச் செய்திருந்தாலும் அத்தோசம் நீங்கப்பெற்றுக் குரு ஆன்மசுத்தியுடையவராய் விளங்குகின்றுர். பின் பத்து வகையாக நீராடிப் புறச்சுத்தியைச் செய்துகொள்கிறுர். அதனுல் உடல் ஆரோக்கியம், பலவகையான பாபங்கள் நீங்குதல், மனதில் ஒருமைப்பாடு, திரிகரண சுத்தி இவைகளைப் பெறுகின்றுர். நல்லறங்களைச் செய்யத் தொடங்கும் பொழுது தீயவர் தீயசக்திகளை உபயோகித்து இடையூற்றை விளைவிப்பர். பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமசாந்தி என்ற கிரியை நடத்துகிறார். ஆலயம்மட்டும் சுத்தமானால் போதாது. அக்கிராமத்தில் வசிப்பவர்களும் நோய், பிணியற்றவர்களாய் விளங்கவேண்டும். அப்பொழுதுதான் ஆலயம் சிறப்புடைய தாகும். அடியவர்கள் வந்து தரிசிப்பதி னாற்றான் ஆலயம் தெய்வ சாந்நித்தியம் உடையதாய் விளங்கும். ஆகவே கிராம நன்மைக்காகச் செய்யப்படும் சாந்தி யாதலால் கிராமசாந்தியென்று பெயர் வழங்கப்பெற்றது. அதனைச்செய்து அதன் பின் பிரமா, இந்திரன், அக்கினி முதலாய எண்திசைப் பாலகர்கள் அவ்விடத்தில் வந்து வசிக்கக்கூடியதாகப் பூமியைச் சுத்தி கரிக்கிறார்கள். ஆலயத்தின் வெளிவீதியில் எண்திசைகளில் நின்று அமைதி நிலையைக் குலைக்கும் யக்கர், அரக்கர், பூதங்கள், பிசாசுகள், பிரம்மராக்ஷசர், மகாகாளி, சரளீ, வடுகர் ஆகிய எண்மருக்கும் பலி உணவுகொடுத்து மரியாதை செய்து நீங்கள் இவ்விடத்தை விட்டுநீங்கி மலையடிவாரம், காடு, ஆற்றங்கரை, பாலைவனம், மயானம் முதலிய இடங்களில் சென்று வசியுங்கள். இங்கே இறைவனுடைய பிரதிஷ்டை நடை பெறப்போகின்றது என்று கூறி பிரவேசபலி என்ற கிரியைகளைக் குரு செய்கின்றார். நல்லறங்களைச் செய்யத் தொடங்கும் பொழுது தீயவர் தீயசக்திகளை உபயோ கித்து இடையூற்றை விளைவிப்பர். அத் தீய சக்திகளை நீக்க ரக்ஷோக்ன சாந்தி யைக் குரு செய்கின்றார். ''நான்கு திசை களில் இருந்து வரும் தீய சக்திகளை அழிக் கும் ஆற்றல்மிக்க தேவர்களே! உங்களுக்கு வணக்கம். எம்மைக் காத்தருள் புரிவீர் களாக என்று பிரார்த்தனை அமைந்துள் ளது திசாஹோமம்.

வாஸ்துசாந்தி ... பூமியானது அசுத் தாக கடசம்பந்தம் உள்ளதினால் அதை நீக்கிச் சத்பாவம் உண்டாவதற்குச் செய்வது, அசுத்த சொருபமான பூமியை பாலாக்கினியால் தகித்து பின் பூமிக்கு அதிபதியான பிரமாவின் மூச்சுக்காற்றினால் சோதிருபமாகிச் சுத்தம் செய்வதாம். நீற்றுப் பூசினிக்காயைப் பூமியின் வடிவமாகத் தியானித்து அதன் விதைகளை அண்டங்களாக நினைத்து எல்லாவற்றையும் ஹோமம் செய்து பின் பூமிக்கு அதிபதி யான பிரமாவின் கட்டளையினாற் பரிசுத்த மானதாகப் பாவித்தல் வாஸ்துசாந்தி யாகும். இச் சாந்தி கும்பாபிஷேகம், பாலஸ்தாபனம், யாகமண்டப கல்பனம் கோபுரம், தடாகம், வீடு, உற்சவம் போன்ற இடங்களில் அவசியம் செய்ய வேண்டும்.

### வாஸ்துவின் வரலாறு

முன்னொரு சமயம் அந்தகன் என்ற அசுரனுடன் இறைவன் போர்செய்யும் போது அவரது மேனியிலிருந்து வேர்வைத் துளி நிலத்தில் விழுந்தது. அத்துளி உலகம் முழுவதையும் தன்னுள் விழுங்கும் வலிமை பொருந்திய பூதமாகத் தோன் றியது. இறைவன் கட்டளையால் அந்தப் பூதம் அந்தகாசுரன் இரத்தத்தைப் பருகியது. பின் சிவபெருமான் மகிழ்ச்சியுற்று அப்பூதம் விரும்பிய வரங்களைக் கொடுத்தார். வரங்களைப் பெற்றுப் பூதம் மூவுலகத்தையும் கொடுமைப் படுத்தியது. தேவர்கள் இறைவனிடம் தஞ்சம் புகுந்தனர். சிவபெருமான் உருத்திரனை யும் பாசங்களையும் படைத்தருளினார் சிவ பெருமான் பூதத்தின் வலிமையை ஒடுக்கு மாறு கட்டளையிட்டார். உருத்திரனும் பாசங்களால் அப்பூதத்தைக் கட்டி நிலத்தில் வீழ்த்தி பிரமாதி தேவர்களை வாழச்செய் தார். இந்த வாஸ்து சாந்தியை சிவாசாரி யர் செய்து ஆலயத்தைச் சுற்றிலும் தேவர் கள் வந்திருந்து இறைவன் பிரதிஷ்டையில் கலந்துகொள்ளும்படி செய்வதாக அமை கிறது.

### விக்கிரகப் பிரதிஷ்டை

உருவத் திருமேனி புதிதாகத் தாபிக் கப்படுவதாயின் குரு சிற்பியைக்கொண்டு (நயனோன்மீலனம்) கண்திறத்தல் என்ற கிரியையைச் செய்விக்கிறார். உருவத்திரு மேனியைச் சுற்றித் திரையிட்டு சிற்பி குரு வின் கையிலிருந்த ஆயுதத்தைப் பெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் நெற்றிக் கண்ணையும் அடுத்தது சூரிய நேத்திரத்தையும் அதன் சந்திர நேத்திரத்தையும் இறைவனைத் தியானித்துக் கொண்டு ஆயுதத்தால் திறக்கின்றார். வாய், மூக்கு, கண், காது, தொப்பூழ், நகக் கண் முதலிய ஒன்பது இடங்களில் சிறு துவாரத்தை உண்டுபண்ணுகிறார். பின் குரு பிம்பசுத்தி முடித்து பால், நெய், தேன், நெல், கண்ணாடி, யானை, அந்தணர், கன்னிப் பெண், தீபம், பசு, எஜமானன், பஞ்சா ராத்திரிகம் இவைகளை இறைவனுக்கு முன் வைத்துத் தரிசிக்கச் செய்கின்றார். அதனால் பசுச்செல்வம் தானிய வளர்ச்சி, இன்ப வாழ்வு, வீரியம், மனோபலம், வேதநெறி, கற்பு, அறிவுச்சுடர், சிவதர்மம், ஐந்தொழில் இவையாவும் நாட்டில் சிறப்பாக விளங்கும் என்பதாகும். பின் உருவத் திருமேனியைத் தண்ணீரில் மார்பளவில் வைத்து சக்தி வடிவமாக இருந்தால் காதளவுவரை தண்ணீரில் வைத்து விசேட பூஜை அபிஷேகம் இவைகளை ஆசாரியர் செய்கின்றார். இதனை ஜலாதிவாசம் என்பர். பின் தண்ணீரிலிருந்து எடுத்து தானியாதிவாசம் என்கிற கிரியையை ஆசாரியர் செய்கிறார். சுத்தமான தானியத்தை எடுத்துப் புண்ணியாக நீரால் தெளித்து முற்கூறிய அளவில் அத்தானியத்தால் மூடி எண்மலரால் அர்ச்சித்து ஒருமுகூர்த்தகாலம் அவ்வாறு வைத்திருந்து பின் பிம்பத்தை எடுத்து ஒரு பீடத்தில் வைத்து அடியார்களைக் கொண்டு வீதி வலம் செய்விக்கின்றார். கோபுர வாயிலை அடைந்ததும் ஆசாரியர் (திருஷ்டி தோஷநிவிர்த்தி) கண்ணூறு நீங்குதல் என்ற கிரியையைச் செய்கின்றார்.

பின் மாலையில் சயனாரோகணம் என்ற கிரியையையும் செய்துமுடிக்கிறார். சுத்தமான விரிப்பில் தலையணை முதலாய உபகரணங்களுடன் உருவத்திருமேனியைப் படுக்கவைத்து விஷேச பூஜை நியாசம் முதலியவற்றைச் செய்கின்றார். இதனால் சயனாரோகணம் என்று கூறுவர். கண்திறத்தல், நீரில் வைத்தல், நெற்குவியலில் வைத்தல், வீதிவலம், படுக்கையில் விடுதல் இவ்வைந்து காரியங்களையும் ஆசாரியர் செய்துமுடிக்கின்றார்: விவேச பூதானி சராசராணி என்பது வேதமந்திரம், சரப்பொருள், அசரப்பொருள் எல்லாவற்றிலும் இறைவன் மறைந்து நிற்கின்றார் என்பது கருத்து. அந்த இறைவன் ஒளியாகவும் உணவாகவும் நீராகவும் காற்றாகவும் இருந்து உயிர்களைக் காத்து வருகின்றான் என்றும் போற்றப்படுகின்றான். அருவமாகப் பஞ்சபூதங்களில் பரவிநிற்கும் இறைவனை உருவத்திருமேனியில் வந்து இணைந்து அருள்புரியுமாறு இவ்வைந்து கிரியைகள் செய்யப்படுகின்றன. கண்திறத்தல் என்பதால், ஒளியிலிருந்தும் நீரில் வைத்தல் என்பதால், ஜலத்திலிருந்தும் நெற்குவியலில் வைத்தலால், நிலத்திலிருந்தும் வீதிவலம் வருதலால், ஆகாயத்திலிருந்தும் படுக்கையில் கிடத்தலால் காற்றிலிருந்தும் இறைவனுடைய சக்தி உருவத்தில் இணைந்து கொள்கின்றது. ஆகவே புதிய உருவத்திருமேனிக்கு இவ்வைந்து கிரியைகளையும் ஆசாரியர் செய்துமுடிக்கின்றார். பின் சுப வேளையில் யந்திரஸ்தாபனம் செய்து பீடத்திற்கும் உருவத்திருமேனிக்கு இணைப்பை உண்டுபண்ணுகிறார் எந்த ஆலயத்தில் பீடபந்தம் இல்லாது மூர்த்தி காணப்படுகிறதோ அங்கு செய்யப்படும் பூஜை முதலிய யாவும் பயனற்றவையாகும் என்று ஆகமநூல் கூறுகிறது. அடுத்து பிம்பசுத்தி என்ற கிரியை நிகழும். தர்ப்பை அடிமண், புற்றுமண், நாவலடி மண், ஆலடிமண், வில்வமரத்தடி மண், துளசியடிமண் இவைகளை ஒரு மண்கலத்திலிட்டு நீர்நிறைத்து அதுபோல அரசு, ஆல் அத்தி, வில்வம் நாவல், மா இவைகளின் தளிரை ஒருகலசத்திலும் வைத்து நீர் நிறைத்து ஆத்மதத்துவம், வித்தியாதத்துவம், சிவதத்துவம் என்ற தத்துவத் திரயத்தைப் பூசித்து அக்கலச நீரால் பிம்பத்தை அபிஷேகம் செய்தால் பிம்பசுத்தியாகும். பிம்பசுத்தி முறையாகச் செய்யப்படாவிடில் தெய்வசாந்நித்தியம் உண்டாகாது.

### மிருத்சங்கிரகணம்

பாலிகை தெளிப்பதற்காகப் புண்ணிய பூமிக்குச் சென்று மண்ணெடுத்து வருதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதையும் அங்குரார்ப்பணம், பாலிகை தெளித்தல் என்பதையும் இவ்விரண்டு கிரியைகளையும் குரு செய்கின்றார். இவ்விரண்டும் படைப்பு என்ற தத்துவத்தைக் குறிக்கிறது. ஆகவேதான் பூமிதேவியைப் பூசித்து வழிபட்டுப் பிரார்த்தனை முடித்துப் பூமிதேவியின் வயிற்றிலிருந்து மண் எடுக்கப்படுகின்றது. படைப்புக்குரிய இடம் வயிறாகும். அதுபோலவே பாலிகை தெளித்து அங்குரம் நன்கு வளருவதால் நாட்டில் தானிய வளர்ச்சியுண்டாகிப் படைப்புக்கள் வளர்ச்சிபெறும். பின் ஆசாரியர் ரக்ஷாபந்தனம் (காப்புக்கட்டுதல்) செய்கிறார்.

இக்கும்பாபிஷேகத்தை நலம்பெறச் செய்து உலகில் செல்வத்தை உண்டுபண்ணுவதே எனது குறிக்கோள் என நினைந்து எவ்வித இடையூறும் வராவண்ணமும் அப்படி வரின் எம்மை அணுகாவண்ணமும் திடப்படுத்தி பிரதான குருவுக்கும் தேவாசிரியர்களுக்கும் மூர்த்திகளுக்கும் மங்கல நூல் அணிந்து கங்கணம் கட்டுதல்.

பின் ஆசாரியர் பாலாலயம் சென்று இறைவனுக்கு பிரசன்னாபிஷேகம் செய்கிறார். அதன் கருத்து பாலாலயத்தில் இருந்து யாகசாலைக்கு அழைத்துச்செல்லக் கருதியுள்ளோம். இறைவன் எங்கள் அழைப்பை ஏற்றுச் சகல கலாமூர்த்திகளுடனும் யாகசாலைக்கு எழுந்தருள ஆயத்தமாகின்றார் என்பதாம். பின் கடஸ்தாபனம் என்ற கிரியை நிகழ்கின்றது. குடத்தை மாவிலை, தேங்காய், கூர்ச்சம், மாலை, வஸ்திரம், மாலை இவைகளால் வேதமந்திர பாராயணத்துடன் நன்கு அலங்கரித்துப் பாலாலயம் சென்று இறைவனுக்குமுன் கலசத்தை வைத்துப் (கலாகர்ஷணம்) பிம்பத்திலிருந்து கலசத்தில் வந்து சகல கலைகளுடன் அமரும்படி பிரார்த்தித்துப் பூசித்து யாத்திரா ஹோமம் முடித்து வேதபாராயணத்துடன் சகல வாத்திய கோஷங்களுடனும் வலமாக யாகசாலை சென்று கலசங்களைத் தானிய பீடத்தில் சிவாசாரியர் ஸ்தாபிக்கின்றார். உருவத்திருமேனியிலிருந்த இறைவனை அருவத்திருமேனியாய் அமைந்த கலசத்தில் ஆகர்ஷித்து விசேஷ பூஜை ஹோமம், ஜபம் முதலியவற்றைச் செய்து வழிபடயாக சாலைக்கு அழைத்துச் சென்றதாகக் கருத்தாகும். அருவத்திருமேனி என்று குறிப்பிட்டது இறைவனை நிஷ்களமாக ஆகர்ஷித்து சகளமாகப் பூசிக்கவேண்டும் என்ற ஆகம வாக்கியத்திற்குப் பொருத்தமாம். நிஷ்கள ரூபத்தில் சாந்தி, அதீதஷ்கலை சிரசாகவும் சாந்திகலை முகமாகவும் வித்தியாகலை குஹ்யமாகவும நிவிர்த்திகலை முழங்கால் பாதமாகவும் புவனாத்துவ ரோமங்களாகவும் வர்ணாத்துவா தோலாகவும் மந்திராத்துவா இரத்தமாகவும் பாதாத்துவா தசையாகவும் தத்துவாத்துவா எலும்பு இந்திரியங்களாகவும் நினைக்கப்படவேண்டுமென்று ஆகம சாஸ்திரம் கூறுகின்றது.

### யாகசாலையில்

கும்பம் ஸ்தாபித்தபின் விதிமுறைப்படி குண்டத்தில் ஆசாரியர் அக்கினியை உற்பத்தி செய்கின்றார். மறு நாட் காலை தொடங்கி காலை, மாலை இருநேரங்களிலும் பூஜை, ஹோமம் இவைகளைச் செய்து வருகின்றார். பூஜை, ஹோமம், ஜபம் பாராயணம் முதலியவற்றால் திருவருள் நிறைவு உண்டாகிறது. அக்கினியில் செய்யப்படும் ஹோமத்தால் இறைவன் பூரண திருப்தியடைகிறார். அக்கினி முகா தேவர் என்று வேதவாக்கியம் உள்ளது. இறைவன் அக்கினி முகமாக உடையவர் என்ற கருத்து உருவேறத் திருவேறும் என்ற சான்றோர் வாக்கியப்படி எவ்வளவு ஹோமம் எண் கூடுகின்றதோ அவ்வளவு அருள் நிறைவும் உண்டாகிறது.

### ஸ்பர்ஸாகுதி

யாகசாலையில் வழிபடும் அருவுருவத் திருமேனிக்கும் தருணாலயத்தில் வீற்றிருக்கும் உருவத் திருமேனிக்கும் முப்புரி நூலால் அல்லது தர்ப்பைக் கயிற்றால் தொடர்புபடுத்திச் சிவாக்கினியால் ஆகுதி செய்து சுறுக்சுருவத்துடன் முப்புரி நூலை தொடர்புகொண்டு தருணாலயம் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவத் திருமேனியை பிரம்மபாகம் விஷ்ணு பாகம் உருத்திரபாகம் என்று மூன்றுகப் பிரித்து பூசித்து சுருக்சுருவத்தில் எஞ்சியிருக்கும் நெய்யை அந்தந்தப் பாகத்தில் ஹோமம் செய்கின்றார். இவ்வாறு மூன்று முறை நடைபெறுகின்றது. அக்கினிக்குக் குணம் உருவம் பஞ்சசோதியாகிய பேரொளி அருவம். அது உருவத் திருமேனியில் மறைந்திருக்கிறது. ஒருசமயம் மால் அயனுக்கு அந்தப் பரஞ்சோதி உருவமாகக் காட்சியளித்தது. பின் அந்தச் சோதி குளிர்ந்து மலையாகமாறியது என்பதைப் புராணங்கள்மூலம் நாம் அறிவோம். அந்த மலையிலிருந்து எடுத்து உருவாக்கப் பட்டதே உருவத் திருமேனியாகும். உருவமான சிவாக்கினியில் ஹோமம் செய்து யாகசாலையில் நிகழ்த்திய ஹோமத்தின் பலன்கள் யாவும் இந்த உருவத் திருமேனியில் நின்று அருள் புரியட்டும் என்பது கருத்தாகும். எண்குணத்தராகிய பெருமானை அக்கினியில் தனித்தனியே பிரித்து நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா என்ற எண்வகையாக ஆயிரம், ஆயிரமாக நெய்யால் ஆகுதிகள் செய்தல் அக்கினியில் செய்யப்பெறும் ஓமங்கள் ஆகுதிகளை இறைவன் முழுமனதுடன் நேரடியாக ஏற்கிறான் என்பது ஆகம பிரமாணமாகும்.

### குண்டத்தில் ஓமம் செய்யப்படும் திரவியங்களாவன

| | |
|---|---|
| சமித்து | 32 வகைகள் |
| தானியம் | 32 வகைகள் |
| கிழங்குகள் | 10 வகைகள் |
| பலகாரம் | 10 வகைகள் |
| மருந்துவகைகள் | 10 வகைகள் |
| வாசனைத்திரவியங்கள் | 10 வகைகள் |
| முகவாசதிரவியம் | 10 ,, |
| ரசப்பொருள்கள் | 9 ,, |
| கொடிகள் இலைகள் | 10 வகைகள் |
| திரவப்பொருள்கள் | 10 வகைகள் |

இவற்றைக்கொண்டு அக்கினியில் குறிப்பிட்டபடி ஓமம் செய்கிறபடியால் பூமியில் ஜீவராசிகளுக்கு நன்மை பயக்கின்றது. அன்றியும் ஓம பஸ்மமானது பெரிய மருந்தாகும். சகலநோய்களையும் நீக்கவல்லதாம். இவ்வாறு ஹோமம், ஜபம், பூசை முதலியவற்றால் யாகசாலையில் வேதிகையில் வைக்கப்பட்ட கலசநீர் அருளமுதமாய் மாறுகிறது.

### கும்பாபிஷேகம்

விஷேச பூரணாகுதி முடித்துத் தீபாரதனை செய்து யாத்திராதானம் முடித்துக் கும்பம் தூக்கி அடியார்கள் புடைசூழ மேள வாத்தியங்களுடன் தருணலயம் சென்று சுபமுகூர்த்தத்தில் கலசத்தின் அருளமுதை உருவத் திருமேனியில் சிவாச்சாரியர் அபிஷேகம் செய்கின்றார். தொடக்கம் முதல் பலகிரியைகள் நிகழ்ந்துள்ளன. இன்னும் இரண்டு கிரியைகள் உள்ளன. இவ்வாறிருந்தும் பிரதிஷ்டை என்று பெயரிட்டு அழையாமல் மகா கும்பாபிஷேகம் என்று பிரசித்தமாக விளங்குவதன் காரணம் யாது? படிகநிறம் வாய்ந்த சிவலிங்கம் பாதாளத்திலிருந்து வானளாவிப் புவனம் முழுவதும் வியாபித்து நிற்கின்றது. கூடிக்குறையாத பூரணச்சந்திரன் சிவலிங்கத்தின் சிரசில் விளங்குகின்றது. அதிலிருந்து அமுதநீர் பெருகிக்கொண்டேயிருக்கின்றது. அக்காட்சியை சிவாச்சாரியர் உள்ளத்தால் தியானித்துக்கொண்டு நமசிவாய என்ற ஐந்தெழுத்தை நடுமணியாகக் கொண்டு விளங்கும் ஸ்ரீ ருத்ரத்தை ஜபித்துக்கொண்டு அபிஷேகம் செய்யவேண்டுமென்ற விதிமுறையைப் பின்பற்றி இயற்கையாகவே இறைவன் முடியிலிருந்து இடைவிடாது அருளமுதம் பொலியப் பூசை ஹோமங்களால் அருளமுதமாக மாறிய கலசநீரை அத்துடன் சேர்த்து அபிஷேகம் செய்வதாக அமைந்தபடியால் மகாகும்பாபிஷேகம் என்று பெயரிட்டு அழைக்கப்படலாயிற்று. மகா—போற்றத்தக்க கும்பாபிஷேகம் கலசநீரால் அபிஷேகம் செய்தல் என்ற கருத்தாகும்.

### மகாபிஷேகம்

கும்பாபிஷேகம் முடிந்தபின் பால் தயிர், இளநீர் முதலிய விஷேச திரவியங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களால் இறைவனுக்கு அபிஷேகம் செய்தல் மகாபிஷேகமாகும். அதனல் இறைவன் உளம் மகிழ்வுபெற்றுப் பரிபூரண அருளைச் செய்கின்றூர். இறைவன் அக்கினியை முக மாக உடையவர் என்று முன் கூறப்பட்டது. அந்த அக்கினிக்கு ஏழு நாக்குகள் உள்ளன. சிவாக்கினியில் பால், தயிர், பழவகை முதலியவை விஷேசமாகக் ஹோமம் செய்யப்பட்டுள்ளன. அதனல் இறைவன் கலசத்தில் அருள் பாலிப்பவராய் விளங்கு கிறூர். பின் கும்பாபிஷேகம் முடிந்தது.

உருவத் திருமேனியில் மறைந்திருப் பது பரஞ்சோதி. அந்த அக்கினிக்கு ஆயிரம் நாக்குகள் உள்ளன. ஆகவே ஏராளமாக பால், தயிர், இளநீர், பஞ்சாமிர்தம் முத லியவற்றுல் அபிஷேகம் செய்து ஆசாரி யர் திருவருள் நிறைவை உண்டுபண்ணு கிறூர். இறைவன் தக்ஷிணூமூர்த்தியாய் இருந்து ஸநகாதி முனிவர்களுக்கு ஞானத் தையுபதேசிக்கின்றூர் என்று சாஸ்திரம் கூறுகின்றது. முனிவர்களுக்கு உபதேசிக்க உருவாக வந்த இறைவனும் முனிவனுக விளங்குகின்றூர். முனிவர்களுக்குரிய முக்கிய விரதம், (திரிஷ வனம்) மூன்றுநேரம் நீட் டல். ஆகவேதான் (அபிஷேகப் பிரிய சிவ, அபிஷேகத்தில் விருப்பமுள்ளவர் சிவன் என்று சான்றோர் போற்றியிருக்கிறூர்கள்

## மண்டலாபிஷேகம்

நாற்பத்தைந்து நாட்கள் தொடர் பாக அபிஷேக பூசை நடைபெறுகின்றன பொருள் வசதி குறைந்தவர் வேறு வசதிக் குறைவுகளாலும் 20 நாட்கள் தொடர்ந்து அபிஷேகம் செய்துமுடிப்பார்கள், கும்பா பிஷேகம், மகாபிஷேகம். மண்டலாபி ஷேகம், மூன்று கிரியைகளிலும் அபிஷேகம் என்னும் சொல்லால் குறிக்கப்பட்டுள்ளது. அபிஷேகத்தில் விருப்பம் உடையவர் சிவன் என்ற கூற்றை அனுசரித்து அமைந்தது மகாபிஷேகம், மண்டலாபிஷேகம் இவ்விரு கிரியைகளும் இறைவனின் (சாந்நித் தியத்தை) திருவருள் நிறைவை உண்டு பண்ணுவதாய் அமைந்தவை.

## முடிவுரை

அண்மையில் அனலைதீவு எழுவடி வயல் எழுமங்கை நாச்சிமார் என வழங்கும் ஸ்ரீ மனேன்மணி அம்பாளின் மகாகும்பா பிஷேகம் நடைபெறத் திருவருள் கூட்டி யுள்ளது. அக்கும்பாபிஷேக மலரில் கும்பா பிஷேக முறைகளும் விளக்கமும் வெளிவரு வதும் அம்பாளின் திருவருள் தான் என்று கருதுகின்றேன். ஸ்ரீ மனேன்மணி அம்பா ளின் அடியார்கள் இக்கும்பாபிஷேகத்தில் கலந்து நிகழ்ச்சிகளில் பங்குபற்றித் தரி சித்துச் சகல இஷ்டசித்திகளையும் பெற்றுய் வார்களாக.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்."


சுபமஸ்து.

சமயகுரவர் ஒருவரைக் குவலயத்தில் காண்பது அரிது. ஒருவேளை ஆயிரம் வருஷத்துக்கு ஒருதடவை ஒருவர் வரலாம். அத்தகையவர் நல்வாழ்வு வாழ்ந்து உலகுக்கு வழி காட்டுகிறூர். புத்தகங்களும் பிரசங்கங்க ளும் பின்னணிக்குப் போய்விடுகின்றன. எத்தகைய வாழ்வு மனிதன் வாழ வேண்டுமென்று அவர் தாமே வாழ்ந்துகாட்டுகிறூர். வாய்ப்பேச்சாலல்ல, வாழ்க்கை யின் மூலம் புகட்டும் பாடமே மேலானது.

— தாயுமானவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும்
நவக்கிரக நாயகர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பிகையின் கடைக்கண்

நல்லைக் குருமணியின் பிரதம சிஷ்யன், "கானகதாவாரிதி"
**பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா (ஆசிரியர்)**

"ஸ்ரீ வித்தியாம் சிவவாம பாகநிலயாம்
ஹரீங்கார மந்ரோஜ்வலாம்!
ஸ்ரீ சக்ராங்கித பிந்துமத்ய வசதீம்
ஸ்ரீமத் சபாநாயகீம்!!
ஸ்ரீமத் சண்முக விக்னராஜ ஜநநீம்
ஸ்ரீமத் ஜகன் மோகினீம்
மீனாட்சீம் ப்றணதோஸ்மி சந்தத மகம்
காருண்ய வாராம் நிதிம்!!

கனகசபையிலே எம்பிரானுன சிவ பெருமானுனவர் நடனமாடிக் கொண்டாலும் அன்னை சிவகாமி அருகில் இருக்க ஆடுவதால், அம்பிகைக்கும் சபா நாயகி எனப் பெயர் வரலாயிற்று. இதி லிருந்து தெரிவது யாதெனில் எக் காரியங்களும் கணவன் மனைவி இருவரும் இணைந்து செயல்படுவதற்கு ஈடாகாது. சிவ பெருமானை தேவகணங்களோ நந்தி, வியாக் கிரபாதர், பதஞ்சலி போன்ற ரிஷிகளோ தனியே நின்று சிவன் நடனம் புரிந்து காட்சிதரும்படி வேண்டவில்லை. அன்னை சிவகாமியும் சேர்ந்தே காட்சிதரத்தக்க தாகக் கண்டார்கள். இதனுலும் சிவன் சக்தி இரண்டும் ஒன்றே என்ற பொருளும் மறைமுகமாக விளங்குகிறது. தீயும் சூடும் போல சிவமும் சக்தியும் இணைந்திருக்கிறது. சிவபெருமானுடைய திருவருளே சக்தி யாகும். ஆகவே சிவத்தினின்றும் சக்தி பிரிந்திருப்பதில்லை. இதனை சௌந்தர்ய லகரியிலுள்ள ஒரு செய்யுளின் முற்பகுதி யில்

"சிவமெனும் பொருளுமாதி
சக்தியோடு சேரின்
எத்தொழிலும் வல்லதாம்
இவள்பிரிந்திடினி யங்குதற்கும் அரிதரி
தெனுமறை இசைக்குமால்"

என்று கூறப்பட்டிருப்பது நன்கு விளங்கு கின்றது.

மேலும் சிதம்பரத்திலே சிவகாமி யெனப் பெயர்பெற்று ஆட்சிசெய்யும் அம்பிகை மதுரையிலே மீனுட்சி என்ற பெயருடன் மதுரையை ஆட்சிபண்ணும் ராணியாகத் திகழ்கிருள். பிரபஞ்சத்தை வாழவைக்க வேண்டுமென்ற நோக்கிலே சிதம்பரத்தில் நடனமாடும் சிவனுடன் இணைந்த அன்னை, தன்னை வருந்திக்கேட்கும் தன் பிள்ளைகளான அடியார்களுக்கு வேண்டுவதைக் கொடுக்கவே சாந்தசொரு பியாக தாயாக மதுரையில் வந்து கோயில் கொண்டருளினுள். எனவே மதுரை மீனுட்சி எனப் பெயரை அடைந்தாள்.

தங்கத்தை நிறுக்கத் துலாக்கோல் உண்டு, பாலை அளக்கப்படியுண்டு, துணியை அளப்பதற்கு ஒரு கோல் உண்டு. அது போல் ஆளை [மனிதனை] நல்லவனு? கெட்ட வனு? என்று அளக்க ஒரு கருவியுண்டு. அது அவனவன் கண்களே. ஆகவே ஆளை அளக் கின்ற அளவுகோல் கண்கள். இவன் பசித் திருக்கிருன், மகிழ்ச்சியுடன் இருக்கிருன், மது உண்டிருக்கிருன், திருடி இருக்கிருன் என்பதை கண்களைப்பார்த்து அறிந்து கொள்ளலாம். ஒரு வைத்திய ரும் நோயாளியின் கண்களைத்தான் அழுத் திப்பார்த்து நோயை அறிகின்ருர். அம்பி கையின் நாமங்களில் பல கண்களைப் பற்றியே அமைந்திருக்கின்றன. கமலாட்சி பங்கஜாட்சி, வனஜாட்சி, விசாலாட்சி, காமாட்சி, மீனுட்சி, முதலியன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகைக்கு மீனாட்சி என்ற நாமம் எதனால் அமைந்தது? இதனைச் சிந்திப்போம். ஆமை மணலில் முட்டையிட்டு மணலால் மூடிவிட்டுத் தண்ணீருக்குள் செல்லும். சில நாள் பொறுத்து தான் இட்ட முட்டைகளை இருந்த இடத்தில் இருந்து கொண்டே நினைக்கும் நினைத்த மாத்திரத்தில் மணலில் முட்டைகள் வெடித்து குஞ்சுகள் வெளிப்படும். அதுபோல் குருநாதன் வேறு இடத்தில் இருப்பார், சீடன் தூரவேறு இடத்தில் இருப்பான். சீடன் நலம் பெறவேண்டும் என்று அவர் அங்கிருந்து சிந்திப்பார். சீடனுக்கு சகல நலன்களும் விளையும். இது மானஸதீட்சை. இதுபோல மீன் வரிசைகளாக முட்டைகளை இடும். தாய் மீன் மீளவும் அவற்றை பார்க்கின்ற வரை அவைகள் அப்படியே இருக்கும். தாய் மீன் தன்கண்களால் அம்முட்டைகளைப் பார்க்கும். முட்டைகள் வெடித்துக் குஞ்சுகள் வெளிப்படும். தாய் மீன் நடுவில் செல்லும், இருபுறத்தும் மீன் குஞ்சுகள் செல்லும். எதிரிலே வரும் சிறிய மீனை பெரியமீனை தாய் மீன் பார்க்கும். பார்த்த மாத்திரத்தில் சேய் மீன்கள் பசியாறும். ''பார்த்தால் பசி தீரும்'' என்பது பழமொழி. அது மீன்களுக்காக ஏற்பட்டது. மனிதனுக்குரியதன்று. குருநாதன் சீடனுக்கு பார்வையால் ஞானத்தைத் தருவார். இது நயன தீட்சையாகும்.

இந்த மீனைப் போல எம்பிராட்டி தன் கடைக்கண் பார்வையால் அகில உலகங்களையும் காத்தருள்கின்றாள். அதனால்தான் அம்பிகையின் கடைக்கண் சகல ஜீவராசிகளையும், பிரபஞ்சங்களையும் ஓயாமல் பார்க்கிறது. அச்சமயம் ஒருகணம் அம்பிகையின் கடைக்கண் நோக்கு தம்மில் விழாதா எனத் தேவரும் மற்றும் கணங்களும் ஏங்குகின்றனர். இதையே திருவள்ளுவரும் ''கண்ணுக்கு அழகு கண்ணோட்டம்''

அஃது இன்றேல் புண்ணென்றுணரப் படும் என்றார். கண்ணின் ஓட்டம் இராத கண் மணிகள் இரண்டும் மனிதனின் முகத்திலே புண்ணுக்குச் சமம். சில கண்களை நாம் கண்டிருக்கிறோம். கண்ணிலே அசைவு இராதபடி பார்ப்பார்கள். அது கூடாது. நாட்டியத்திற்கு முத்திரைகள் எப்படியோ அப்படியே கண்ணின் வீச்சும் பிரதானமாகும். எனவேதான் அம்பாளின் திருவிழிகளை மீனுக்கு ஒப்பிட்டு உள்ளார்கள். எனவே அம்பிகையின் கண்களில் என்றும் வற்றாத அருளுண்டு. அவள் கடைக்கண் பார்வையினாலேயே பக்தர்களுக்கு அருள் புரிகின்றாள். அவள் கடைக்கண் நோக்கு உண்டானால் நாம் உய்வு பெறலாம்.

''விழிக்கே அருளுண்டு'' என்று அபிராமி அந்தாதியில் குறிப்பிடுகிறார் அபிராமிப்பட்டர். அருள் நிறைந்த அம்பிகையின் கடைக்கண் நம் மீது படுமானால் சகல செல்வங்களும் கிடைக்கும். என்னென்ன கிடைக்கும் என்பதை மிக அழகாக கூறுகிறார் இக்கவிஞர்.

''தனந்தரும் கல்விதரும் ஒரு
நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்தரும்
நெஞ்சில் வஞ்ச மில்லா
இனந்தரும் நல்லன எல்லாந்தரும்
அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி
கடைக் கண்களே''

ஆகவே அம்பிகையை பக்தியுடன் வணங்கி அவளின் கடைக்கண் நோக்கு கிடைக்கப் பெற்று சகல செளபாக்கியங்களையும் பெற்று உய்வோமாக.

சுபமஸ்து

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA

உ

# தேவி உபாசனை

— ஸ்ரீ மருத நமசிவாய தேசிகர் B. A. (லண்டன்) —
(செயலாளர் - சப்த தீவக திவ்விய ஜீவன சங்கம்)

உலகில் நிலவும் சமயங்கள் அனைத்துக்கும் தாய் எனத் தற்போது பல்வேறு நாடு இன மத மொழியினராலும் போற்றிப் புகழப்படும் எங்கள் தாய் போன்ற சைவ சமயத்திலும் இன்னும் வேறு சமய நெறிகள் சிலவற்றுள்ளும் தொன்று தொட்டு நிலவும் ஓர் உயர்ந்த நன்மை தரும் வழக்கம் எங்களைப்பெற்ற தாயை அன்னை பராசக்தியாகப் பாவித்து வழிபாடு செய்யும் முறை.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்ற மணி வார்த்தையின் கருத்தை மனித இனம் முழுவதும் பெரிதும் பாராட்டுகிறது. தன்னுடைய தாயின் பாதங்களை முத்தமிடும் ஒருவன் சொர்க்கத்துக்குப் போவது நிச்சயம் என அராபிய நாட்டு நல்லறிஞர் கூறினர்.

இவை யாவுக்கும் மேலாக தெய்வத்தைத் தாயாகப் பாவித்து வழிபாடு செய்யும் முறை எமது சைவசமயத்திலேயே முதன் முதல் தோன்றியது. இந்த முறை வேத காலத்துக்கு முற்பட்டதும் திராவிட அடிப்படைகொண்டதுமாகிய சிந்துவெளி நாகரிகத்தில் தோன்றியது என அறிஞர் கண்டுள்ளனர். இதன் பின்னர் சக்தி வழிபாடு உலகம் முழுவதும் பரவியது.

சிவபெருமானைப் பற்றி மாணிக்கவாசகப் பெருமான் கூறும்போது அவரைப் 'போக்கும் வரவும் புணர்வுமில்லாப் புண்ணியன்'' என்பர். அதே பரம்பொருளாகிய இறைவன் போக்கும் வரவும் புணர்வுமாகிய இயக்கத்தைச் செய்யும் பொழுது அதைச் சக்தி என்று எம்முன்னோர் கூறி வழிபட்டனர். ஒரே பரம்பொருள் தன்னை உலகின் தோற்றத்துக்கு உட்படுத்தும்போது ''சக்தி'' என்று பெயர் தாங்குகிறது. இந்த உண்மையை தெய்வீகப் புலவராகிய ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள், இந்த உலகங்கள் அனைத்தையும் சிறு குழந்தைகள் மணல் வீடு கட்டி விளையாடுவது போல சிவமும் சக்தியும் தம் திருவிளையாடலால் தோற்றுவிப்பதாகக் கூறுகிருர்.

> ''வைத்த பகிரண்டமெனும்
> மணல் சிற்றில் இழைத்திழைத்தோர்
> பித்தனுடன் விளையாடும் பெய்வளை',

என்பது சுவாமிகளின் அமுதவாக்கு.

திருமூலநாயனர் அருளிய திருமந்திரம் என்னும் நூலின் நாலாம் தந்திரத்திலே இல்லாத சக்தி தத்துவம் வேறு எந்த நூலிலும் கிடையாது என்பர் அறிஞர்.

> ''அவளை அறியா அமரரும் இல்லை
> அவளன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
> அவளன்றி ஐவரால் ஆவதுமில்லை
> அவளன்றி ஊர்புகுமாற்றி யேனே''
>
> (திருமந்திரம்)

செம்மையே ஆய சிவபதத்தைத் தமக்கு அருளிய செல்வத்தை மணிவாசகப் பெருமான் அப்பனுகவும் ஒப்பிலாமணியாகவும் ஆரமுதாகவும் வாழ்த்தமுன் ''அம்மையே'' என்றே போற்றினர்.

அம்பிகையான மகாசக்தி பார்க்குமிடம் எங்கும் நீக்கமற நிறைந்து தனது அருளாணையைச் செலுத்துகிருள். இதை விளக்கவே ஸ்ரீ துர்க்காதேவியின் திருவுருவத்துக்கு மூதாதையராம் ஞானிகள் பத்துக் கரங்களை அமைத்தனர். எட்டுத்திசைகளோடு மேல் நோக்கியும் கீழ் நோக்கியும் செல்லும் மார்க்கங்களாகிய பத்துத் திசைகளிலும் செலுத்தும் அருள் ஆணையை, அதாவது அண்டமெங்கும் செல்லும் ஆணையை உடைய அன்னையின் திருக்கரங்கள் அணைக்கவோ அல்லது அடிக்கவோ செல்லாத இடங்களே இவ்வுலகில் இல்லை எனலாம்.



183611

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிலே விலைமதித்தற்கரிய மாணிக்கம் போன்ற எமது சைவசமயமானது சிவ சக்தியைப் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந்தொழில் களை நடாத்தும் பஞ்ச சக்திகள் எனப்படும் மூர்த்தங்களாக மட்டுமன்றி அவற்றேடு கௌமாரி, வராகி, பிராஹ்மி, இந்திராணி, வைஷ்ணவி உள்ளிட்ட சப்த மாதர்களையும் வாமை, காளி, முதலாகிய நவசக்திகளையும் சிவசக்தியின் மூர்த்தங்களாக ஏற்றுக் கொள்கிறது.

உலகின் ஆதிமக்களாகிய தமிழ் மக்கள் தாம் ஆதிமுதற் கொண்டே வழிபட்டு வந்த தமிழ்க் கடவுளாகிய முருகன் வழி பாட்டில் வள்ளியம்மை என்னும் இச்சா சக்தியையும் தெய்வயானை அம்மை என்னும் கிரியா சக்தியையும் வேல் என்னும் ஞான சக்தியையும் ஆளும் முதல்வனாக ஸ்ரீ முருகப் பெருமானைக் காட்டும் பெருமை தமிழர் சமுதாயம் உலகில் உள்ளவரை உவகை பொங்க வைக்கும் தனிச் சிறப்பாகும். முருகன் வழிபாடு சக்திகள் அனைத்தையும் ஒருங்கே அருளவல்ல ஒப்பற்ற சாதனம் என ஆன்றேர்கள் சொந்த அனுபவம் கொண்டு விளக்கியுள்ளார்கள்.

'துணையும் தொழுந்தெய்வமும் பெற்ற
தாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும்பதி கொண்டவேரும்
பனிமலர்ப் பூங்
கணையும் கருப்புச் சிலையும்மென் பாசாங்
குசமும் கையில்
அணையும் திரிபுரசுந்தரி யாவது
அறிந்தனமே''

என அபிராமிப்பட்டர் பராசக்தியை அருமையாக வருணிக்கிருர். பரந்து விரிந்த கிளைகளையுடைய வேதமாகிய கற்பகத் தருவே தேவி என்று கூறி, அடியார்களுக்கு வேண்டியதை அருள்வதோடு அந்தக் கற்ப கத்தருவின் உச்சியில் ஞானக் கொழுந்தாக அம்பிகை விளங்குகிருர் என்பது அபிராமிப்பட்டரின் கூற்று.

தாயுமானுர், இராமலிங்கர், அபிராமிப் பட்டர் போன்ற பலர் அருட்பாக்கள் மூலம் தேவியை வழிபட்டுள்ளனர். வடமொழியில் ஆதிசங்கரர் அருளிய சௌந்தரிய லஹரியும், ஸ்ரீ லலிதா திரிசதீ ஸ்தோத்திரத்துக்கு அவர் அருளிய விளக்கமும் பிர சித்தி வாய்ந்தவை. ஸ்ரீ பஞ்சதசாக்ஷரீ எனப்படும் மகாசக்தி வாய்ந்த வித்தையான பதினைந்து எழுத்துக்களுக்கும் ஒவ்வொன் றுக்கு இருபது நாமம் வீதம் மொத்தம் முன்னூறு நாமங்களைக் கொண்ட ஸ்ரீ லலிதா திரிசதீ தோத்திரம் அதிஅற்புத சக்தி வாய்ந்த மந்திர சொரூபமாகும். இதனைப் பாராயணம் செய்வோர் அளப் பரிய சக்திகளையும் சித்திகளையும் நன்மை களையும் பெறுவர். அன்புறுதியோடு கூடிய பக்தியே வேண்டும்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் சென்ற நூற்றுண்டில் தேவி வழிபாட்டின் மகிமை யையும் புனிதத் தன்மையையும் தமது சொந்த வாழ்க்கையால் விளக்கிச் சென்றுர்.

நாம ஸ்தோத்திரங்களும் நாமாவளி களும் தேவி உபாசனைக்கு மிகவும் உகந் தவை. தோத்திரங்களைப் படித்துப் பாரா யணம் செய்து பயனடையலாம். நாமா வளிகள் புஷ்பமோ வில்வ பத்திரமோ குங்குமமோ இட்டு அர்ச்சனை செய்யவும் உரியன.

ஒவ்வொரு மொழிக்கும் ஒரு தனிச் சிறப்புண்டு என்பர் மொழியியல் வல்லுநர். தமிழோடு பக்தியும் இனிமையும் இணைந் ததுபோல வடமொழிக்கு மந்திர சக்தி பொருந்தியுள்ளது.

கடவுளைத் தாயாகத் தியானிக்கும் போது அடியார் மனத்தில் அளவற்ற சாந்தி ஏற்படுவதை அனைவரும் அனுபவத் தால் உணரலாம். இப்பேரானந்தம் அனைத்து மக்களுக்கும் கிட்டுவதாக என மனமொழி மெய்களால் பிரார்த்தனை செய்கிறேம்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனத்தின் பெருமை

சிவநெறிச் செல்வர், அறநெறி அன்பர்
**வே. ச. சுப்பையா**

சாதனம் ஒன்றுமின்றிச் சாதிப்பார் உலகில் இல்லை. ஆதலின், யாதேனும் ஒன்றைப் பெறவோ துய்க்கவோ வேண்டுமாயின் அவற்றிற்குரிய சாதனங்களாலேயே கைகூடக் காண்கின்றோம். அதுபோலவே உயிர்கள் தம்மைப் பற்றியுள்ள மலத்தினை நீக்கிப் பிறவித் தொடர்பு அறுத்தற்கும் வீடுபேறு எய்தற்கும் ஏற்ற சாதனங் கொண்டாலன்றி அவை கைகூடா. மனிதப் பிறவியின் நோக்கம் மாதேவனை மனத்தால் நினைப்பதற்கும் வாக்கால் வாழ்த்துவதற்கும் காயத்தால் வணங்குவதற்குமாகும்.

"மானிடப் பிறவிதானும் வகுத்தது
மனம்வாக்காயம்
ஆனிடத் தைந்துமாடி அரன்
பணிக்காகவன்றோ"

என்ற ஸ்ரீ அருணந்தி சிவாச்சாரியாரின் அருள் வாக்கிற்கமைய அகப்புறவழிபாடும், தவம் முதலிய பிறவும் அச்சாதனங்களாகும். ஆண்டவன் அருட்பேறு குறித்து உயிர்கள் மேற்கொள்ளும் தவங்கள் சிந்தை முதலிய கருவிகளால் நிகழ்வனவாகும். சிந்தையால் சிவன் திருவுருவை நினைத்தல், உடற்செய்கைகளாற் தொழுதல், இறைவன் புகழ்மொழிகளைப் பிறர் கூறக் கேட்டல், தான் கூறல் இவற்றை

"சிந்தை செய்கை கேள்வி வாக்குச்
சீறில் ஐம்புலன்களான
முந்தையான காலம் நின்னை
எய்திடாத மூர்க்கனேன்"

என்ற மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாசகத்தின் மூலம் கூறுமாற்றல் அறியலாம். இங்ஙனம் நினைத்தலும், தொழுதலும், கேட்டலும், கூறலுமாகிய இவை சிந்தை செய்கை கேள்வி - வாக்குகளால் நிகழும் தவச்செய்கைகளாகும். இத்தவச் செய்கைகளை உடையவர்க்கு மெய், வாய், கண், மூக்கு, செவிகள் வாயிலாக நுகரப்படும் புலன்கள் எல்லாம் சிவமயமாகவே நிகழும். இங்கனம் சிவமயமாக நிகழும் நிலை சித்தம் சிவமாக பெற்றவர்க்கே இயல்வதாகும்.

சித்தம், மெய், வாய் முதலிய பொறிகள் வாயிலாக உலகியற் புலன்களை விரும்பும். அதனை அறிவினால் தடைப்படுத்த வேண்டும். அங்ஙனம் தடைப்படுத்தியவர்களே சிவஞானிகள், மெய்யடியார்கள். உலகியற் பொருள்களைப் பற்றி கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து உற்றறியுமது ஐம்புலன்களின் இயல்பு இங்ஙனம் உலகியற் பொருளைப் பற்றாமல் ஐம்புலன்களையும் சிவமயமாகவே கண்ட சிவஞானிகள் பலராவர். அவர்களுள் ஒருவர் அன்பின் வரகுணதேவர் சிறந்த சிவபக்தர். பார்த்த இடமெல்லாம் பரமனைக் காணும் உணர்வுடையவர். அவ்வன்பர் - உதிர்ந்து கிடந்த வேப்பங்கனியை ஆண்டவன் அருள்சிவலிங்கமாகக் கண்டார். இதுபோல் குளத்திலுள்ள தவளை கத்துவதை இறைவன் திருப்பெயரை இயம்பினதாகக் கேட்டதுமாகியவை சிவமயமான புலன் நுகர்ச்சிகளாகும் இதனை:

காம்ப வி(ழ்)ந்துதிர்ந்த கனியுருகக் கண்டு
வேம்புகட்கெல்லாம்விதானம் அமைத்தும்
குவளைப் புனலிற் றவளை அரற்ற
ஈசன் தன்னை ஏந்தின என்று
காசும் பொன்னும் கலந்து (தூ) வியும்

என்று பட்டினத்தடிகள் கூறியதன் மூலம் அறியலாம். ஒரு சிவஞானி உலகியலில் நுகரப்படும் ஐம்புல இன்பங்களைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன் அர்ப்பணம் செய்ய வேண்டுமென் பது திருவைந்தெழுத்தின் பொருள். அதாவது:

நுகல் பொருள் எல்லாம் சிவனுக்கே சிவனுக்கில்லை

இன்னும்:-

"சிவோ தாதா சிவோ போக்தா
சிவோசர்வமிதம் ஜகத்
சிவோ யஜதி சர்வத்ர யஸ் சிவோகம் ஏவது"

என்ற அப்பைய தீக்ஷிதர் சிவார்ச்சனு சந்திரிகை என்ற நூலில் விளக்கியுள்ளார். இதற்கும் ஒரு எடுத்துக்காட்டாக விளங் கியவர் வரகுணதேவர். அவர் உலகியல் மூலமாக நுகரப்படும் ஐம்புலன்களைத் தமக் கெனக் கொள்ளாமல் சிவ அர்ப்பணம் செய்தார். இதனை-

"விரும்பின கொடுக்கைபரம்பரற் கென்று
புரிகுழல் தேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய அன்பின் வரகுணதேவர்"

என்ற பட்டினத்தடிகள் பாடற் பகுதி யால் அறியலாம். உலகியல் பற்றிய ஐம் புலன்களை சிவனுக்கு சமர்ப்பணம் செய்து சிவமயமாகப் புலன்களை மாற்றிக் கொள் ளுதலே ஐம்புலன்களால் இறைவனை அடை தற்குரிய வழியாகும்.

சிந்தை, செய்கை, கேள்வி வாக்கு களால் நிகழ்த்த வேண்டிய தவச்செய்கை களையும், அத்தவச் செய்கையுடையார் தாம் நுகரும் ஐம்புல இன்பங்களை சிவ அர்ப்பணம் செய்ய வேண்டுமென்பதையும் முன்னமே அறியாத - அடையாத "மூர்க்கனேன்" என்று மாணிக்கவாசகப் பெருந்தகை கூறிக் கொள்வதை நம்போலி யரை குறித்ததேயாகும். பண்டைப் பிறவி களில் சிந்தை முதலிய கருவிகளாலும் மெய் முதலியவற்றாலும் சிவனை பற்றிஇருந் தால் இப்பிறவியில் திருவடி இன்பம் எளிதில் பெற்றிருக்கலாம். பண்டைப் பிறப்புக்களில் உண்மைப் பொருளை உணர்ந்து சாதனங்களை மேற்கொள்வதற் குரிய அறிவு கைவரப்பெறவில்லை ஆதலின் தம்மை மூர்க்கனேன் என்கிறார். அம்மட்டோ முத்தி நெறியறியாதவன் மூர்க்கவன் - அவனோடு தலைப்பெய்த தன்னை யும் "மூர்க்கன்" என்கிறார் அடிகளார். அன்றியும் உயிர்களால் என்றும் நினைத் தற்குரியவன் நிமலன். அவனை நினையாத வன் நீசன் - மூர்க்கன் - ஆதலின் "முன்னை நினையாத மூர்க்கனேன்" என்றும் திரு வொற்றியூரில் சங்கிலியாரை மணந்திருந்த போது திருவாரூர் நினைவுவர ஆரூர் பெருமானை எண்ணி:

"முத்தினைமா மணிதன்னை வயிரத்தை
மூர்க்கனேன்
எத்தனை நாள் பிரிந்திருக்கேன் என்னாரூர்
இறைவனையே'

என்று சுந்தரர் கூறினர்" இருவரும் தம்மை 'மூர்க்கன்" என்பதற்குக் கூறும் காரணங்கள் ஒத்துள்ளன. சமய குரவர் களாகிய ஆளுடைய அடிகளும் ஆளுடைய நம்பிகளும் தமது தவற்றினையுணர்ந்து நீக்கிப் போற்ற முற்படுவதை நம்மில் பலர் அறிந்து தவற்றினை ஒதி இத்தலைவனை போற்றியுய்வோமாக. அவர்கள் மேற் கொண்டு ஒழுகிய அகப்புற வழிபாடும் பிறவும் அதற்குச் சாதனங்கள் என அறி வோமாக.

"நீ நாளும் நினை கண்டாய் நல்நெஞ்சே
நல்நெஞ்சே உனையிரந்தேன்
நம்பெருமான்
திருவடியே உன்னஞ் செய்திரு"

என்ற ஞானசம்பந்தர் வாக்குகளும்

"வாமனை நினைந்த நெஞ்சம்
வாழ்வுற நினைந்த வாறே
"இராமேச்சரத்தை நாடி வாழ்
நெஞ்சமே நீ"

என்ற திருநாவுக்கரசர் வாக்குகளும் இதனை வலியுறுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பிகை வழிபாடும் சமயத் தொண்டும்

திருமதி சு. சரஸ்வதி (ஓய்வுபெற்ற ஆசிரியை மட்டுநகர்)

இறைவன் சிவமும் சக்தியுமாக இருந்து அடியார்களுக்கு அருள் புரிந்து முத்தொழிலையும் நடத்தி வருகின்றார். இறைவன் உயிர்களிடத்துக் காட்டும் இரக்கமே தயை, கருணை, அருள் எனப் பலவாறுகக் கூறப்படுகிறது. இரக்கத்தின் உறைவிடமாய் பெருங்கருணையின் வடிவமாய் விளங்குபவள் அம்பிகை. சர்வமங்கள நாயகியாகிய பராசக்தியின் அருள் இன்றேல் ஆன்ம கோடிகள் உய்வுபெற முடியாது.

கடவுளை வணங்குவதற்கு அன்னை பாவனையே மிகச் சிறந்தது. இவ்வுலகில் பிறவியெடுத்த உயிர்கள் தம்மைச் சேய்களாகவும் இறைவனைத் தாயாகவும் நினைத்து வழிபடுதல் வேண்டும். இம்முறையினுற்தான் கடவுளின் கருணையை நிரம்பப் பெறமுடிகிறது.

சர்வமங்களங்களும் நிறைந்த கருணைக் கடலாகிய அம்பிகையின் அருளைப்பெற்றவர்களில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர், அபிராமிப்பட்டர், சூரியன், சந்திரன் அக்கினி, குபேரன், இந்திரன், பிரமா, விஷ்ணு, அகத்தியர் போன்ற புண்ணியர்கள் உண்டு. மூன்று வயதில் ஞானப் பாலுண்டார், நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தர் அம்பிகையிடத்து கொண்ட பக்தி மிகுதியினுல் இவ்வுலகினை மறந்த நிலையில் அபிராமிப்பட்டர் தான் நாள் குறித்துக் கொடுக்கும் சர்போஜி மன்னனிடம் அமாவாசையினை, பௌர்ணமி என்று கூறி மன்னனின் தண்டனைக்கு ஆளாக வேண்டிய நிலை அபிராமிப்பட்டருக்கு ஏற்பட்டது.

அப்பொழுது தான் அபிராமி அந்தாதி பாடப்பட்டது. அச்சமயம் அம்மன் அவரில் இரங்கி அவரின் உயிரைக்காக்கும் பொருட்டு இருள்நிறைந்த அமாவாசை இரவில் பூரண சந்திரனை வானத்தில் வரவழைத்துக் கொடுத்தார். ஒவ்வொரு பௌர்ணமியிலும் மாலை நேரத்தில் அம்மனுக்கு விஷேட பூசைகள், அபிஷேக ஆராதனைகள் செய்விப்பது பெரிய தவப் பேறுகும். இத்தகையோருக்கு தேவியும் வேண்டுவதையெல்லாம் ஈந்தருள்வாள்.

அன்னை பராசக்தி உண்டென்பவருக்கு ஒளிவிளக்காயும், இல்லை என்பவருக்கு இருளாயும் இருப்பவள் என்று அபிராமிப் பட்டருக்கு கிடைத்த அருளே நற்சான்றுகும்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி அவளை வழிபட்டால் ஊமையும் பேசுவான், அறிவிலியும் புலவனுவான். அம்பிகையால் இயலாதது ஒன்றுமில்லை. யாவும் அம்பாளின் சக்தியாலேயே இயங்குகின்றன. ஸ்ரீதேவி பதினுறு பேறுகளையும் வழங்குகின்ருள். அழுகின்ற பிள்ளையைத் தாய் அணைப்பது போல உலகத்தில் தன்னுல் படைக்கப்பட்ட உயிர்களனைத்தையும் உலக மாதா காத்தருள்கிருள். அன்பு, பண்பு, அறம் மிகுந்தவர்களிடத்திலே அன்னை கொலுவீற்றிருக்கிருள். நாம் எம்மை முழுமையாக அன்னையின் தாமரைத் திருவடிகளில் ஒப்படைப்பின் அவள் எமது இடர் கெடுத்து காத்து அருள் அமிர்தம் அளிப்பாள்.

இத்தகைய சிறப்புக்களையெல்லாம் உடைய அம்பிகை கொலுவீற்றிருந்து அருளாட்சி செய்ய ஆலயம் அமைப்பதும், சித்திரதேர் அமைப்பதும் நித்திய பூசைகள் செவ்வனே நடைபெறத் தொண்டாற்றி வருவது போன்ற இன்னேரன்ன சமயப் பணிகள் செய்வோருக்குப் பலகோடி புண்ணியம் கிடைக்கும். இப்படி ஒவ்வொரு கிராமங்கள் தோறும் அம்பிகை ஆலயம் இருப்பின் அக்கிராமத்திற்கே மிகச் செழிப்பாகும்.

அக்கிராம மக்களும் நாட்டிலுள்ளவர்களும் இம்மை மறுமைப் பேறுகளை எய்துவர். திருக்கோயில் வழிபாடு, திருவிளக்கிடுதல், ஆலயத்தை மெழுகி அல்லது கழுவி சுத்தம் செய்தல், தினமும் பூசைக்கு வேண்டிய புஷ்பங்கள் மற்றும் திரவியங்கள் வழங்கல் முதலியனவெல்லாம் சிறந்த புண்ணியங்களாகும்.

வையம் நீடுக மாமழை மன்னுக  
மெய் விரும்பிய அன்பர் விளங்குக  
சைவ நன்னெறிதாந்தழைத் தோங்குக  
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீகத்தை நாமும் உணரலாம்

பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் (அருளாளன்)

தெய்வீகம் புனிதமானது. எளிமை, கருணை, வலிமை முதலியவற்றில் உன்னதமானது.

வஞ்சனை, சூழ்ச்சி, பொறாமை முதலிய சிறுமைகள் அற்றவர்களாய் பணிவு, இரக்கம், நேர்மை முதலிய மனிதப்பண்பு மிக்கவர்களாய் உள்ளவர்கள் அவ்வப்போது தெய்வீக இயல்பையும் தெய்வீக வெளிப்பாட்டையும் அறிந்து உணர்ந்து மகிழும் வாய்ப்பினைப் பெறுவர்.


தெய்வத்தை நாடி ஓடி ஆரவாரப்படுதல் பிறரின் தெய்வ நம்பிக்கையை வைத்தே புகழும் பணமும் அடைய முயலுதல் ஆகிய இயல்புடையோர் தெய்வீகத்தை உணரவோ அறியவோ தெய்வீகத்தால் இன்புறவோ மிக நீண்ட கால தாமதம் ஏற்படும்.

தெய்வீகத்தைப் பற்றிய அக்கறை இல்லாதிருந்தாலும்கூட வஞ்சனை முதலிய சிறுமைகள் இல்லாதவராயும் பணிவு முதலிய மனிதப்பண்பைப் பேணுபவர்களாயும் உள்ளவர்கள் முன் தெய்வீகம் தானாகவே வெளிப்படும். தானாகவே இத்தகையவர்களுக்கும் தெய்வம் கருணைபுரிந்து இத்தகையவர்களை மேம்படுத்தும். இப்படியான தெய்வீக நன்மையினை நம் முன்னோர் பலர் பெற்று உய்தியடைந்தமையினை இன்று செவி வழியாகக்கேட்கும் பாக்கியம் செய்தவர்களாகவே நாம் உள்ளோம். நம்மில் பலர் இத்தகைய கர்ணபரம்பரைச் செய்திகளைச் சந்தேகப்படும் அளவுக்கு மனத்தெளிவற்றவர்களாகவும் உள்ளதை உணர முடிகின்றது. கிணற்றுத்தவளை, கிணற்றுக்கு வந்த கடற்தவளையிடம் தான் பாய்ந்து செல்லும் அளவு பெரிதாகக் கடலிருக்குமோ என்று கேட்க; இல்லை கிணற்றிலும் பல மடங்கு பெரிது கடல் என்று வந்த தவளை கூற கடல் என்று ஒன்றிருப்பதே நம்பமுடியாததென்ற கிணற்றுத்தவளை நிலையில் விரிவில்லாத மனச்சிறுமை உடையவரே தெய்வீகச் செய்திகளைச் சந்தேகிக்கின்றனர். ஊர்கள் தோறும் உள்ள பல ஆலயங்களில் பலவற்றின் தோற்றம் ஆங்காங்கு நிகழ்ந்த தெய்வீக வெளிப்பாடுகளின் காரணமேயாகும்.

கல்வி வசதிகள் சமய விளக்கங்கள் என்பன இல்லாத காலத்தில் நம் முன்னோரிடம் விளங்கிய எளிமை தூய்மை முதலிய பண்புகளை விரும்பி வஞ்சனை, பொறாமை, பேராசை போன்ற சிறுமைகளை நாம் ஒழிக்க முயலுவோமானால் இத்தகைய தெய்வீக ஆலயங்களை மையமாக வைத்தும் பணிவும் எளிமை மிகத்தக்க வாழ்வை மேற்கொள்வதைக் காரணமாக தெய்வீக வெளிப்பாட்டை உணரவும் தெய்வீகக் கருணை மூலம் சிறப்புறவும் வாய்ப்புகள் பெருகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்திலுள்ள
பரிவாரமூர்த்திகளில் ஒன்றான வைரவர்.

University of Jaffna Sri Lanka
RECEIVED
1988-10-28
Periodicals Division
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை பராசக்தி

க. ஆறுமுகம்
ஆலய முகாமையாளர்

தூயதான துரிய அறிவெனும் தாயும்நீர்
இன்பத் தந்தையும் நீரென்றல்
சேதபதாம் இந்தச் சிவத்திர ளன்றோ
ஆயும் பேரொளியான அகண்டமே.

ஆதியந்தமற்ற இறைவன் அடியார்களை ஆட்கொள்ளும் வண்ணம் பல வடிவங்களிற் காட்சியளிப்பார் என்பதனை மெய்யடியார்கள் வாயிலாக நாம் அறிந்துள்ளோம்.

தேவி வழிபாடு அல்லது சக்தி வழிபாடு இன்று நேற்று ஆரம்பமானதல்ல. அது பல நூற்றாண்டுகளாக தமிழ் மக்களிடையே இருந்து வருகிறது. இறைவிதனை தம் அன்னையாக பாவனை செய்து வழிபடுவதில் பக்த கோடி மக்கள் பரவசமடைந்து இருக்கின்றார்கள். ஏன் என்றால் தாய்ப்பாசத்திற்கும் தாயன்பிற்கும் நிகரானது இவ்வுலகில் வேறொன்றும் இல்லை.

ஆதி சக்தி அவளே. அணுத்திற்கும் மூல சக்தி அணுவிலணுவாகவும் அண்டத்தினண்டமாகவும் நீக்கமற நிறைந்துள்ள மகா சக்தியும் அவளே. இச்சக்தியையே இயற்கை என்பர். ஐம்பூதங்களின் அமைப்பு என்பர். அஃபென்பர் அரிதென்பர் ஆற்றலென்பர் சக்திதான் யாதோ வெனின் நித்திய ஞானம் என்பர். உயர் என்பர் ஈசன் என்பர், உழைப்பென்பர்.

திருவருட் சக்தியும் உலகமாதாவுமாகிய அன்னை பராசக்தியை பல திருநாமங்களினால் மக்கள் அழைகின்றார்கள். முழுமுதற் கடவுளாகிய சிவனின் இடப்பாகத்தில் எழுந்தருளித் திருவருட்சக்தியாய் பஞ்ச கிருத்தியத்திற்கும் காரணமாய் விளங்கும் போது உமாதேவியென்றும், காஞ்சிபுரத்தில் ஏகாம்பரநாதனின் இடப்பாகத்தில் காமாட்சி என்றும், சிதம்பரத்திலே ஆனந்தத்தாண்டவம் ஆடும் போது, சிவகாம சுந்தரியென்றும் மதுரை சோம சுந்தரக்கடவுள் திருமருக்கில் இறைவன் சௌந்தரபாண்டியனான போது தடாதகை பிராட்டி யென்றும், இதேபோல் காசியில் உள்ள விசுவநாதப் பெருமான் பாங்கில் விசாலாட்சியென்றும் இவற்றை விட இன்னும் அனேக நாமங்களைப் பெற்று ஆன்ம கோடிகளுக்கு அருள் சுரப்பாள் அன்னை.

சக்தி என்ற சொல் ஒரு சக்திவாய்ந்தது தேவியையும் சக்தியென்கிறோம். சக்தியின்றி சிவம் இயங்காது என்ற வாக்கியம் எவ்வளவு உண்மையானது.

பக்தர்கள் ஆலயங்களில் அன்னைக்கு நாளாந்தம் நித்திய பூசை செய்வதுடன் ஆண்டுக்கு ஒரு முறையாவது ஒரு குளிர்ச்சி அபிஷேகம் செய்வார்கள்.

மற்றைய விஷேட தினங்களை விட நவராத்திரி தினங்களே அன்னை வழிபாட்டுக்கு விசேடம் வாய்ந்தவை. அத்தினங்களில் இந்து சமயத்தவர்கள் ஆலயங்களில் மட்டுமல்ல இல்லங்களிலும் பாடசாலைகளிலும் ஏன் காரியாலயங்களிலும் சிறப்பாகவும் புனிதமாகவும் கொண்டாடுவார்கள். இவ்வொன்பது தினங்களில் முதல் மூன்று நாட்களும் வெற்றியை வேண்டி துர்க்கா தேவிக்கும், அடுத்து மூன்று நாட்களும் செல்வத்தை வேண்டி இலக்குமி தேவியையும், இறுதி மூன்று தினங்களும் கல்வியை வேண்டி சரஸ்வதியம்மையையும் வழிபடுவார்கள். ஒன்பதாம் நாள்இரவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுத பூசை என்பர். இத்தினத்திலே சகல தொழிலாளரும் தாங்கள் செய்யும் தொழிலுக்குரிய ஆயுதங்களை பூசையில் வைத்து கலைமகளை வழிபடுவர்.

நவராத்திரிக்கு அடுத்த நாள் விஜய தசமி எனப்படும். அத்தினத்திலே ஆலயங்களில் மகிடாசுர வதத்தைக் குறிக்க கன்னி வாழை வெட்டி மானம் பூவிழாக் கொண்டாடுவார்கள்.

சுபம்

அன்பினர் இரப்பநின் இரட்டியருள் செய்யும்
நின்பத தருத்துணர் நிறைந்தொலிர் வனப்பார்
இன்பமுறு தேன்முழுதும் என்னிதய வண்டின்
தம்புழகம் மெய்கழி தளைக்கவருள் தாயே.

அவளை ஒழிய அமரரும் இல்லை
அவளன்றிச் செய்யும் அருந்தவ மில்லை
அவளன்றி மூவரால் ஆவதொன் றில்லை
அவளின்றி ஊர்புகு மாறறி யேனே.

அவளை அறியா அமரரு மில்லை
அவளன்றிச் செய்யும் அருந்தவ மில்லை
அவளன்றி ஐவரால் ஆவதொன் றில்லை
அவளன்றி ஊர்புகு மாறறி யேனே.

தையல் நல்லாளைத் தவத்தின் தலைவியை
மையலை நோக்கு மனோன்மணி மங்கையைப்
பையநின் றேத்திப் பணியின் பணிந்தபின்
வெய்ய பவமினி மேவகி லாவே.

பாரணி கொங்கை மனோன்மணி மங்கலி
காரணி காரிய மாகக் கலந்தவள்
வாரணி ஆரணி வானவர் மோகினி
பூரணி போதாதி போதமு மாமே.

(திருமந்திரம்) க- ஆ.

சத்தியாய் விந்துசத்தியாய் மனோன்மணி தாகிய
ஒத்தவுமகேசையாகி உமைதிரு வாணியாகி
வைத்துறுச் சிவாதிக்கின்ன வரும்சக்தி ஒருத்தியாகும்
எத்திறம் நின்றானீச னத்திற மவளும்நிற்பாள்:

ஆலிக் குங்கன்னனி அரிவை மனோன்மணி
பாலித் துலகிற் பரந்து பெண்ணாகும்
வேலைத் தலைவியை வேத முதல்வியை
ஆலித் தொருவன் உவந்து நின்றானே.

அன்னையை உள்முகமாகப் பூசிப்பது மிகச் சிறந்தது. நம் இதயத்தையே தேவியின் திவ்வியரத்தினமயமான ஆலயமாக பாவிக்க வேண்டும். ஆலயத்தில் தூய்மை முக்கியம். அப்படி நம் இதயம் காமக் குரோதாதி அழுக்குகள் அற்றதாய் வைத்துக் கொள்ள வேண்டும். பாவனையால் பூசைக்கு வேண்டிய திரவியங்களை சேகரித்துக் கொள்ள வேண்டும். தேவியை நாபிக் கமலத்தில் இருக்கச் செய்து அபிஷேகம் செய்து வஸ்திரம் ஆபரணம் ஆகியவற்றை முறையே அணிவித்தல் வேண்டும். வைராக்கியமாகிய சந்தனத்தை சாத்தி அஹிம்சை இந்திரியக்கட்டுப்பாடு, பொறுமை, தவம், சத்தியம், ஞானம், அன்பு என்னும் மலர்களைக் கொண்டு பூசித்தல் வேண்டும். மனம் என்னும் பாத்திரத்தில் பிராணனாகிய அக்கினியை உண்டாக்கி அவ்வக்கினியில் அகங்காரமாகிய தூபத்துடன் ஞானமாகிய தீபத்தைக் காட்ட வேண்டும். உலக சுகங்களில் இருந்து திருப்பப்பட்ட உள்ளத்தை நிவேதனமாகப் படைக்க வேண்டும். இவ்வாறு இதயத்தில் பூசையும் நாபியில் ஹோமமும், புருவமத்தியில் தியானமும் செய்தால் பெறுதற்கரிய நற்பேறுகளை அன்னை சக்தியீவது திண்ணம்.

சுபம்

அறையில் உள்ள குளிரோ, வெப்பமோ, குப்பையோ குடியிருப்பவனால் உணரப்படுகிறது. ஊழை முன்னிட்டு உடலுக்கு வரும் நலம் கேடுகளை ஆத்மா உணருகிறது. ஆனால் அவைகளை உணராதிருந்து பழக வேண்டும்.

— திருமந்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுமங்கை நாச்சிமார் பேரில்

# கோலாட்டக் கும்மி

அமரர் ஐ. ஆறுமுகம் புலவர் அனலைதீவு

குறத்தி தரு மெட்டு

| | |
|---|---|
| அனலையம் பதிகாக்கும் | எங்கள் குல தெய்வம் |
| அரசடியிற் கோயில் கொண்ட | எங்கள் குல தெய்வம் |
| சிங்கவாக னமுடைய | எங்கள் குல தெய்வம் |
| செல்வங்கள் தந்திடுவாள் | எங்கள் குல தெய்வம் |
| மகிடனைச் சங்கரித்த | எங்கள் குல தெய்வம் |
| மனோன்மணி பராசக்தி | எங்கள் குல தெய்வம் |
| சிவசக்தி உமையம்மை | எங்கள் குல தெய்வம் |
| திருமாலின் சோதரியாம் | எங்கள் குல தெய்வம் |
| ஆனை முகனைத் தந்த | எங்கள் குல தெய்வம் |
| ஆறுமுகன் மாதாவாம் | எங்கள் குல தெய்வம் |
| மதுரைமீ னாட்சியடி | எங்கள் குல தெய்வம் |
| வடிவழகி காமாட்சி | எங்கள் குல தெய்வம் |
| கேதார கௌரியம்மா | எங்கள் குல தெய்வம் |
| கிருபையுள்ள சிவகாமி | எங்கள் குல தெய்வம் |
| தீராதநோய் தீர்த்திடுவாள் | எங்கள் குல தெய்வம் |
| திரமுள்ள மாரியம்மன் | எங்கள் குல தெய்வம் |
| கல்விசெல்வம் தந்திடுவாள் | எங்கள் குல தெய்வம் |
| கன்மவினை போக்கிடுவாள் | எங்கள் குல தெய்வம் |
| குறையாத அருள்புரிவாள் | எங்கள் குல தெய்வம் |
| வெள்ளிக் கிழமைதனில் | எங்கள் குல தெய்வம் |
| விரும்பிய வரம் தந்திடுவாள் | எங்கள் குல தெய்வம் |
| சப்த கன்னி மாராக | எங்கள் குல தெய்வம் |
| தாரணியைக் காத்திடுவாள் | எங்கள் குல தெய்வம் |
| ஈசன் இடப் பாகமமர் | எங்கள் குல தெய்வம் |
| எழுமங்கை நாச்சிமார் | எங்கள் குல தெய்வம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனலையூர் எழுமங்கை நாச்சிமார் கோவில்

திரு. பி. சுந்தரம்
( அதிபர் யாழ் அனலைதீவு வடலூர் அ. த. க. வித்தியாலயம் )

அனலையூர் தன்னில் அணிவயல்கள் சூழ
ஆங்காங்கே நன்னீர் சுரந்து நிற்க
செவ்விளநீர்த் தென்னைகளும் செழித்து நிற்க
ஆலமரம் அரசமரம் அமைந்த காட்சி
கண்ணுரக் காண்பதற்குக் கவி னளிக்கும்
தெய்வமெனும் அரசமர நிழலில் வந்து
தேவியர்கள் குடிகொண்ட மாட்சி யன்றோ
எழுமங்கை நாச்சிமார் கோயில் கொண்டார்
அலைகடலின் ஆட்சியிலே அமைந்த வூரில்
அம்மனின் அருள் சொரியும்வாறு நோக்கின்
அழுதபிள்ளை பால்பெறுதற் கன்னைநோக்கி
அம்மம்மா என்றிடவே அன்னை வந்து
அரவணைத்து ஆரமுதே அன்பே யென்று
அமுதூட்டும் தன்மையது அம்மன் எங்கள்
எழுமங்கை நாச்சி யம்மன் காட்சியன்றோ.
அம்மனின் அருளாலே அனலை மக்கள்
அனைவருமே சைவமக்கள் ஆகி நின்று
அடியாராய் அம்மையின் ஆசி பெற்று
திரைகடலின் மேலாகப் பறந்து சென்று
திசையெல்லாம் பரந்துகாணும் மேலை நாடு
சென்றங்கே வளம்பெற்று வாழுங் காட்சி
தெய்வத்தின் சிறப்பருளே ஆகு மன்றோ.
குளங்கள்பல வரண்டிடாமல் காட்சியளிக்க
குறையாமல் மழையதனைப் பெய்ய வைக்கும்
பெருந்தேவி அன்னையினின் அருளே யாகும்
வேளாண்மை மேன்மைதரு மிவ்வூர் தன்னில்
விளைச்சலுக்குக் குறைவில்லை அன்னை தன்னால்
அரசமர நிழலே அன்னையின் கோயில்
அமைந்தமையை அறிந்திட்ட அடிய வர்கள்
அன்னைக்குக் கோபுரக் கோயி லமைய
அகமகிழ்ந்து அளித்தனர் நிதிகள் தன்னை
ஆயது கோயில் அம்மனின் அருளுடன்
சீரிய தோற்றம் சிறப்பான கோபுரம்
அமைய வேண்டி அம்பாளைத் துதிப்போம்
ஆழிசூழ் அனலையை அரணாக அமைத்திட்ட
அம்பாளின் மலர் மலர்ந்து மணம் வீசுகவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
அம்பாள் துணை

# அனலைதீவு
# எழுமங்கை நாச்சிமார் பதிகம்

**அமரர் ஐ. ஆறுமுகம் புலவர்**
அனலைதீவு.

### ஆசிரியர் விருத்தம்

1. சுந்தரி சவுந்தரி நிரந்தரி துரந்தரி
துணைவிசிவ சங்கரியும்நீ
சுத்த சற்குணப் பரிபூரண மகுட
சூரனை வதைத்தவளும்நீ
சிந்தைதனிலுன்னை மறவாத அன்பர்க் கருள்செய்
திரிலோக மாதாவும்நீ
திருமால் சகோதரி சிவபிரான் நாயகி
திறல்மிகு பராசக்திநீ
மைந்தனுகிய எனக்கிரு வினை களைந்தருள்
வல்லசெகன் மாதாவும்நீ
வாதபித்தம் சேடமான பல நோய்கள்
வாராதுகாத்திடும் அம்மைநீ
இந்துவத னம்பிகா செந்தமிழ்க் கலாவல்லி
இறைகௌரி அம்மனும்நீ
ஈஸ்வரி மனோன்மணி அனலையம் பதிமேவும்
எழுமங்கை நாச்சிமாரே.

2. பத்துவிரல் மோதிரம் முத்துமாலையும் மணிப்
பதக்கப் பிரகாசஒளியும்
பாதச் சிலம்பினெடு தண்டைகொலு சும்மிக்க
பணிமணித் தாலிஅழகும்
முத்து மூக்குத்தியுஞ் செங்கைபொற் கங்கணம்
மோகனமாலை காதில்வைரம்
முழுதும்வை டூரியம் புட்பரா கத்தினல்
முறை செய்ததலையணிகளும்
சுத்தமாகிய தங்க பட்டாடை உடையினெடு
தோற்றும்முன் திருவடிவினைத்
துரியநிலைபெற்று சிவ ஞானியர்களும் யறிவார்கள்
தொண்டனேன் அறிய வசமோ
இத்தலைத் துயிர்களுக் கன்னையே, சிவகாமி
என்னைஆட் கொண்டருளுவாய்
ஈஸ்வரி மனோன்மணி அனலையம் பதிமேவும்
எழுமங்கை நாச்சிமாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. முப்பத்தி ரண்டறம் வளர்த்துயிர்களைக் காத்த
முதல்விகா மாட்சிஅன்னையே
முதன்மையுள இமயபர் வதராசர் புதல்வியே
மூப்பிலா இளங்குமரியே
செப்பரிய தத்துவா தீதமுள தேவியே
திகழ்சியா மளரூபியே
செகமதில் தனுகரண புவனபோ கந்தரும்
சிவகாமி யானஉமையே
வைப்புற்ற திருவருட் பொக்கிஷக் குன்றமே
மகேஸ்வரி மீனாட்சியே
மண்டலந் தன்னிலே கண்கண்ட தெய்வம்நீ
மற்றுமொரு தெய்வமுண்டோ
எப்பற்று மில்லாத நித்தியகல் யாணியே
ஏழையைக் காத்தருள்வாய்
ஈஸ்வரி மனோன்மணி அனலையம் பதிமேவும்
எழுமங்கை நாச்சிமாரே.

4. எத்தனை துயரென் றியம்புவேன் அம்மம்மா
எளியேன்செய் கொடுமைஏதோ
இக்காயம் இச்செல்வம் நிலையென்று நம்பியான்
இப்படி யெலாந்தளர்ந்தேன்
பெற்றதாய் நீயென்று முறையிட்டு அலறிட
பேசா திருப்பதேனோ
பேச்சியென் றேற்குதல் தாட்சியோ அம்மணி
பிள்ளைமேல்கோபம் ஏதோ
அத்திமுக னைப்பெற்ற நித்தியகல் யாணியே
அமரர்தொழு சர்வாணியே
அறியாத சிறுவன்மீ தினியேனு முளம்மகிழ்ந்
தன்புவைத்து அருள்புரிகுவாய்
இத்தரணி உயிர்களைப் பெறுதுபெற் றருள்செய்த
இனியசெக மாதாவெனும்
ஈஸ்வரி மனோன்மணி அனலையம் பதிமேவும்
எழுமங்கை நாச்சிமாரே.

5. புத்திரசந் தானமொடு கல்விசெல்வம் முதல்
போகபாக் கியங்க ளெல்லாம்
புனிதவதி அம்மையே யுன்கிருபை யில்லாது
புவிதனில் பெறமுடியுமோ
யுத்தம் புரிந்தும கிடாசூரனைக் கொன்று
உம்பரைக் காக்கவில்லையோ
உன்மகிமை சதுர்வேத ஆகம புராணங்கள்
ஓதியே புகழவில்லையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தர்சம் பந்தர்க் கமிர்த ஞானப்பால்
பருக்கியாட் கொள்ளவிலேயோ
பாலாவி யில்கௌரி யாயிருந் தடியரின்
பழவினைகள் தீர்க்கவிலேயோ
எத்தனை சென்மங்கள் தனையெடுத்துப் புல்கின்ற
எளியனைக் காத்தலரிதோ
ஈஸ்வரி மனோன்மணி அனலையம் பதிமேவும்
எழுமங்கை நாச்சிமாரே.

6. மின்னனைய வுடலத்தை நிலையென்று நம்பியே
விரகவெறி கொண்டுமீறி
விழியா லுருட்டியிரு முலையால் மயக்கிவரு
மின்னார்கள் இன்பமெய்திப்
பொன்னனைய செல்வமே அழியாத புகழென்று
பொய்யைமெய் யாகவெண்ணிப்
பொறையீகை சாந்தமொடு குறைவிலா தறமெலாம்
போக்கிலே போகவிட்டுத்
தன்னையறி யாமலிப் பிரபஞ்ச வாழ்வினில்
தயங்கிமதி கேட னேன்
தற்பரணி டத்திலமர் சிற்பரா னந்தியே
தமியனுக் கருள்புரிந்து
இன்னல் தருமிப்பிற சாகர் மொழித்துனது
இணையமிப் பே றுதருவாய்
ஈஸ்வரி மனோன்மணி அனலையம் பதிமேவும்
எழுமங்கை நாச்சிமாரே.

7. வஞ்சனைசெய் பேய்பில்லி சூனியம் பிரிவறம்
வாதுமோ கினியேவுதல்
வதைசெய்யும் மிருகபயம் உடையுடைக் கூறிபயம்
மாயமந் திரோற்சாடனம்
மஞ்சனப் பேய்களும் பிரமசா முண்டியும்
மாடனும் லாடமுனியும்
மருவுகாட் டேரியும் சாகினி டாதினியு
மஞ்சியே ஓட்டெடுக்கப்
பஞ்சுமெல் லடியினை யுன்னையா னென்றுமே
பயிரவி யெனப்போற்றவே
பக்தர்க் கிரங்கியே சிங்கவா கனமூர்ந்து
பட்டாளமோடு குடபால்
எஞ்சலில்லா வளந்தங்கும் அரசம் புலத்
தெழுந்தருழு மெங்கள்தாயே
ஈஸ்வரி மனோன்மணி அனலையம் பதிமேவும்
எழுமங்கை நாச்சிமாரே.

8. பெற்றதாய் தந்தையும் பிறவியு மிருந்தென்ன
பிள்ளைபெண் சாதியென்றும்
பிரியமாய் மனிதர்க்கு ஞறவாகி யிருந்தென்ன
பிராணனுக் குதவியுண்டோ
நித்தனரின் இடப்பாகத் திருந்தருள் செய்
நீலியம் பிகைசாலியே
நீங்கவொட் டாமலே தேங்குமுள் மலம்நீக்கி
நிலையான பதவியருள்வாய்

LIBRARY UNIVERSITY OF JAFFNA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெத்தவே நொந்துனது சிற்றடியை நம்பினேன்
மிகமௌன மாயிராதே
மேதினியி லுன்னைவிட வேறுமொரு தெய்வங்கள்
மெய்யான தெய்வமுண்டோ
எத்திசையும் எவ்வுலகும் ஏத்திடும் புகழ்பெற்ற
இறைவிபார்ப் பதியம்மையே
ஈஸ்வரி மனோன்மணி அனலையம் பதிமேவும்
எழுமங்கை நாச்சிமாரே.

9. மாலயன் உருத்திரர்கள் முப்பத்து முக்கோடி
வானவரும் மாமுனிவரும்
மாதிரத் தலைவரும் வசுக்களும் வயிரவரும்
வருபூத கணநாதரும்
வேலாயு தத்தனும் சாத்தனும் நந்தியும்
வீரபத் திரக்கடவுளும்
விண்ணுலவு கின்னரர்கள் கந்தருவர் நாரதர்
மேன்மையுள நவசக்திமார்
கோலா கலத்துடன் உனதுகொலு மண்டபம்
கூடிநின் றழகுசெய்வர்
குலவிய அவர்க்கெலாம் உன்பெரிய மகிமைகள்
கூறுதற் கெளிதாகுமோ
ஏலாத நிலையிலே யாம்காண முடியாது
இறைவியே அருள்புரிகுவாய்
ஈஸ்வரி மனோன்மணி அனலையம் பதிமேவும்
எழுமங்கை நாச்சிமாரே.

10. ஓம்கார சக்திநம காளிநம துர்க்கைநம
உலகமா தாவேநம
உமைமகேஸ் வரிநம திரிசூலி நீலிநம
ஓதுசிவ சங்கரிநம
ஆங்கார ஐயைநம மாதங்கி கௌரிநம
அகிலபுவ னேஸ்வரிநம
அன்னமீ னுட்சிநம சிவகாமி அம்மைநம
ஆதிபர மேஸ்வரிநம
பாங்கமர் விசாலாட்சி காமாட்சி தேவிநம
பணிநாக ஈஸ்வரிநம
பரஞான வுருவுடைய அம்மையே நமவென்று
பரவினேன் கிருபைபுரிவாய்
ரீங்கார இசைதரு சிலம்பினொ டெழுந்தருளி
எல்லோர்க்கும் அருள்சுரக்கும்
ஈஸ்வரி மனோன்மணி அனலையம் பதிமேவும்
எழுமங்கை நாச்சிமாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தில்
எழுந்தருளியிருக்கும் சண்டேஸ்வரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரமும் வேகமும்

திரு. வே. கணேசன்
அனலைதீவு.

எந்த ஒரு காரியமும் நிகழ்வும் நமக்கிடையே நடக்கும் போது "அதற்கான நேரம் வந்துவிட்டது, அது நடக்கவேண்டிய வேளை வந்துவிட்டது" இவ்வாறு எல்லாம் கூறுகின்றோம். இதில் இருந்து நாம் ஒன்றை நன்கு உணரவேண்டும். அதாவது நாம் எதிர்பார்க்கும் அத்தகைய நேரம் வந்துவிட்டது என்றால் அதற்குக் காரணம் இச் செயல்களுக்குப் பின்னால் இலைமறை காயென ஆண்டவனின் அருட்கடாட்சம் ஒளிந்துள்ளது. நமக்கென ஒரு நேரத்தை வகுத்து வைத்துள்ளவளும் அவளே. ஆண்டவனின் அநுக்கிரகம் இல்லாது அணுவும் அசையாது. இத்தகைய இறைவன் எங்கட்கு மட்டும் அல்லாது தனக்கெனவும் ஒரு நேரத்தை வகுத்து வைத்துள்ளான். இந்த நிலையில் இறைவி ஸ்ரீ எழுமங்கை நாச்சிமார் (மனோன்மணி) அம்பிகை தனக்கென ஒரு சிறப்புமிகு ஆலயத்தை அமைப்பதற்கு பக்தர்களுக்கு உரிய நேரத்தில் செயலில் வேகத்தைக் கொடுத்து, எப்பொழுது அவ் ஆலயத்தில் தான் எழுந்தருளவேண்டுமோ அந்த நேரத்திற்கு ஏற்றவாறு ஆலயத்தை அமைத்துக் கொண்டுள்ளாள், அதாவது தனக்கு வேண்டியநேரத்தில் ஆலயத்தைக் கட்டிமுடிக்க அவளது பக்தர்களுக்கு அவளால் ஊக்கமும் செயலில் வேகமும் கொடுக்கப்பட்டு இவ் ஆலயத்தை பூர்த்தி ஆக்கிஉள்ளாள்.

இவ்வாறு அன்னையின் அருளோடு இவ் ஆலயத்தை அமைத்து முடித்தோர் அவளின் இஷ்டசித்திகளைப் பெற்று உய்வார்கள் என்பது திண்ணம்.

17. 05. 82 தொடங்கி 20. 7. 86 வரை பதவியில் இருந்த ஆலய பரிபாலன சபையாருக்கு அம்பிகை தனக்கென புது ஆலயத்தை புதிய இடத்தில் அமைப்பதற்காக அடியார்களுக்கு போதிய ஊக்கத்தையும், அவர்களது செயல்களில் போதிய வேகத்தையும் கொடுத்ததன் பிரகாரம் மேற்படி பரிபாலன சபையார் அம்பாளுக்கு புதிய ஆலயம் அமைக்கும் நேரம் வந்து விட்டதை உணர்ந்து தீவிர முயற்சி எடுத்து பழைய ஆலய முன்றலில் கிடந்த காணியை விலை கொடுத்து வாங்கினார்கள். இவ்வாறு வாங்கிய காணியில் ஆலயம் நிர்மாணிக்கப்பட்டு அவ்வாலய கட்டிட வேலைகளை செவ்வனே செய்து முடிக்க அரும்பாடு பட்டு தன்நலம் கருதாது உழைத்தார்கள். இதன் பிரகாரம் கட்டிட வேலையில் சிறுபகுதியை அழகுறச் செய்து முடித்த நிலையில் 20. 8. 86ல் அவர்கள் பதவி விலகிக் கொண்டார்கள்.

இதன் பின் 20. 8. 86ல் புதிய பரிபாலன சபையார் பதவிக்கு வந்தனர். ஆலய வேலைகள் யாவும் இவர்கள் காலத்திலேயே முடிக்கப்படவேண்டும் என உணர்ந்த அம்பாள் இவர்களுக்கு சகல அநுக்கிரகங்களையும் வழங்கி, இவர்களின் செயல்களில் தீவிர வேகத்தையும் கொடுத்து தனக்கென ஒரு அழகான ஆலயத்தை அமைத்துக் கொண்டுள்ளாள்.

இவ் ஆலயம் சகல விதிமுறைகளுக்கு அமையவும், இத்தகைய சிறப்பு மிகு ஆலயமாக அழகுபடவும், சகல அம்சங்களும் பொருந்தியதாகவும் அமைக்கப்பட்டுள்ளமைக்குப் பெரும்பான்மையாகப் பங்களித்தவர்களில் தற்போதைய பரிபாலன சபையினரே என்றால் மிகையாகாது. இப்பரிபாலன சபையினர் தன்நலம் கருதாது இரவு பகல் என்று பாராது அயராது உழைத்ததன் பலனே இவ் அழகுறு ஆலயம். ஒவ்வொரு உறுப்பினரும் தங்களுக்கு இடப்பட்ட பணிகளை செவ்வனேசெய்து முடித்தமை இவ்வன் குறிப்பிடத் தக்கது. இரண்டு ஆண்டுகளில் இப்பரிபாலன சபையார் செய்துள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டுகள் அளப்பரியதும் அதிசயிக்கத் தக்கதும் ஆகும். இத்தகைய பரிபாலன சபையினர் இடையே எதுவித வேறுபட்ட கருத்துக்கள் வராமலும் நேரத்திற்கு நேரம் கொடுக்கப்பட வேண்டிய சகல ஆலோசனை களையும் வழங்கி ஒவ்வொரு உறுப்பினரது வேலைகளையும், கடமைகளையும் திறம்படச் சுட்டிக்காட்டி, அவர்களைக் கொண்டு செய்வித்தும், அவர்களால் செய்ய முடியாது போனவிடத்து அப்பணிகளை தானே சிரமப் பட்டுச் செய்தும், தனக்கு உள்ள சொந்தப் பணிகளை மறந்து அம்பிகையின் திருப் பணியே தனது பணி எனக்கருதி அயராது உழைத்தவர் இப்பரிபாலன சபை செயலா ளரே என்பது மறுக்கப்பட முடியாத உண்மை. எனவே பொதுமக்கள் ஆகிய யாம் அவரது இத்தகைய முயற்சிகட்கு என்றென் றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள் ளோம்.

இவ்வாலயத்தின் அழகை மிளிரச் செய் வது இவ்வாலயத்தில் ஒவ்வொரு மூர்த்திகட் கும் தனித்தனிக் கோயில்கள் அமைக்கப்பட் டுள்ளமையே ஆகும். பிள்ளையார் ஆலயம், முருகன் ஆலயம், நவக்கிரக ஆலயம், வைர வர் ஆலயம், சண்டேஸ்வரி ஆலயம், மற்றும் மணிக்கோபுரம், வசந்தமண்டபம், சுற்று மதில், யாகசாலை, களஞ்சிய அறை, காரி யாலய அறை மடப்பள்ளி, நந்திபலிபீடம், கொடித்தம்பம், திருமஞ்சனக்கிணறு மற்றும் முகப்புக் கிணறு, மூகப்பு கதவு போன்ற வையும் இப்பரிபாலன சபையின் தீவிர ஊக்கத்திலும் பொதுமக்களின் அதிசயக்கத் தக்க ஆதரவிலும் குறுகிய காலத்தில் மிகவும் சிறப்புற அத்துடன் அழகுபட அமைக்கப் பட்டுள்ளனவே ஆகும். பணத்தைப் பெரி தென மதியாது அம்பாள் தொண்டே அடி யேன் தொண்டு என்ற தத்துவத்திற்கமைய மக்கள் இச்சிறப்புமிகு ஆலயத்தை அமைக்க பணத்தை வாரி வழங்கியமை யாவரையும் மெய்சிலிர்க்க வைக்கிறது. இதற்கெல்லாம் காரணம் அம்பாளின் அநுக்கிரகமே ஆகும்.

நாட்டின் இக்கட்டான இச் சூழ்நிலை யில் இந்தியாவிலிருந்து அம்பிகையின் மூலஸ்தான விக்கிரகம் எத்தனையோ சிரமங் களுக்கு மத்தியில் கொண்டு வரப்பட்டமை உண்மையிலேயே எம்மை மெய் சிலிர்க்க வைப்பது மாத்திரமன்றி அம்பாளின் அருட் கடாச்சத்தை எண்ணி வியக்கவும் வேண்டி உள்ளது. இவ்வாறு கொண்டு வரப்பட்ட மேற்படி விக்கிரகம். அதாவது அம்பாள் மேலங்கியை அணிந்து கொண்டே புது ஆலயத்தினுள் செல்ல இருக்கும் காட்சியை நினைக்கும்போது மெய்மறந்து நிற்கின்றோம்.

இவை தவிர விழாக்காலங்களில் சபா மண்டபத்திலிருந்து உற்சவ மூர்த்தியாக வலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிக் கவிருக்கும் புதிய எழுந்தருளி விக்கிரகம் குறுகிய காலத்தில் புதிதாகச் செய்யப் பட்டமை ஆலய நிர்வாகத்தின் திறமை என்பதா? இல்லை அம்பாளின் புதுமை என்பதா? அத்துடன் ஆலயத்தில் அமைக் கப்பட்டுள்ள ஒலி, ஒளி அமைப்பை எண்ணும் போது அதற்கு மேலும் ஒரு படி அம்பாளின் புதுமையை எண்ணி வியக்க வேண்டியுள்ளது.

தற்போதைய பரிபாலன சபையார் வெளிநாடுகளில் உள்ள நம்மவர்களுடன் தொடர்பு கொண்டும் உள்நாட்டில் உள்ள பொதுமக்கள் யாவருடனும் தொடர்பு கொண்டும் தங்களது பதவிக் காலமாகிய 2 வருடத்தில் கிட்டத்தட்ட 7 லட்சம் ரூபா விற்கு மேற்பட்ட தொகையினைச் சேகரித்து இவ்வாலயத்தை அமைத்தது அம்பாளின் கிருபையே தவிர வேறொன்றும் இல்லை. இன்னும் சில திருப்பணிகள் இவ்வாலயத் தில் செய்ய வேண்டி உள்ளது என்பதை, வருங்காலப் பரிபாலன சபைகள் மனதில் கொண்டு பொதுமக்களின் ஆதரவுடன் இவ்வாலயத்தைப் பூர்த்திசெய்வார்கள்என்ற அசையாத நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி

❊ ❊



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீ மனோன்மணி அம்பாள் துணை

# அனலைதீவு - எழுவடிவயல் எழுமங்கை நாச்சிமார்

என வழங்கும்

# ஸ்ரீ மனோன்மணி அம்பாள் திருவூஞ்சல்

*(எச்சரீக்கை - பராக்கு - லாலி - மங்களம்)*

*இயற்றியவர்:*

இயலிசைவாரிதி, கவிமாமணி, ஸாஹித்யமாமணி, ஸாஹித்யசிரோன்மணி, ஸாஹித்யஸாகரம்
ஸாஹித்யலஷ்மி, ஸாஹித்யவேந்தன், முத்தமிழ்வித்தகர், சிருஷ்டிகலாபானு.
யாழ்ப்பாணம். (இணுவில்)

**பிரம்மஸ்ரீ. மா. த. ந. வீரமணிஐயர் அவர்கள்**

(விரிவுரையாளர் - ஆசிரிய கலாசாலை - கோப்பாய்.)

### காப்பு

தித்திலப்பந் தலைக்கரத்தால் ஆடிப் பாடும்
நீண்டிரைசூழ் மேலனலைச் சைவநாட்டில்
கத்துவளைக் கழனியெனும் எழுவ டியில்
கவினருள்செய் எழுமங்கை நாச்சி அம்மை
வித்தகியாம் மனோன்மணித்தாய் மகிழ்ந்தே ஆட
விரிமலர்ச்செந் தமிழினிசை ஊஞ்சல் பாட
அத்திமுகத் தண்ணலவன் அடிகள் என்றும்
அவனியிலே அருள்நல்கிக் காப்ப தாமே.

### நூல்

1. பொன்னுரும் நால்வேதம் கால்க ளாகப்
பொலிந்தசிவா கமம்வயிர விட்ட மாக
மின்னுரும் நாற்க்ரணம் வடங்க ளாக
மிளிரும்ஸ்ரீ சக்கரமாம் பீடம் மேவி
பன்னுக வடம்புனைந்து எழு வடியில்
பசும்வயல்சூழ் எழுமங்கை நாச்சித் தாயே
மன்னுரும்சிவப் பதியாம் அனலை மேவும்
மாதாம னோன்மணியே ஆடீர் ஊஞ்சல்.

2. மேதினியில் பக்தியெனும் கால்நி றுத்தி
மேவிடும்ஐம் புலன்களையே விட்ட மாக்கி
ஆதரவாய் நாற்கரண வடங்கள் மாட்டி
ஆனந்தத் திருவருளாம் பலகை தேக்கி
பேதமிலா ஜீவாத்மா முத்தி என்னும்
பேரின்ப ஊஞ்சலிலே ஆடருள் செய்
கீதமலி நனிநாடாம் அனலை மேவும்
கோமளம் மனோன்மணியே ஆடீர்ஊஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பொன்முடியும் ஆடப்பூங் குழலு மாடப்
புனைந்த பிறை மதிரவியும் இசைந்தேஆட
நன்னுதலின் புருவவில்லும் நயந்தே ஆட
நளினகுங் குமத்திலகம் இலங்கி ஆடப்
புன்முறுவல் பூத்தருளும் இதழும் ஆடப்
பூமுகத்தின் தாமரையும் மலர்ந்தே ஆடப்
பன்மொழியின் கவினுர்மலி அனலை மேவும்
பார்வதிம ஞேன்மணியே ஆடீர் ஊஞ்சல்.

4. மங்கலப்பொன் னணியாரம் மார்பில் ஆட
மகரகுண் டலம்செவியில் ஊஞ்ச லாட
அங்கயற்கண் அம்பிகையின் அருளும் ஆட
ஆனந்த பைரவியின் நயன மாட
பங்கயச்செங் கரங்களிலே படைக ளாட
பட்டாடைச் செஞ்சேலை இசைந் தேஆட
பொங்குமெழு வடிவயலின் அனலை மேவும்
பூரணிம ஞேன்மணியே ஆடீர் ஊஞ்சல்.

5. பச்சைவனத் திருமேனி எழிலாய் ஆடப்
பாம்பணிகள் சுழன்ருடப் பதக்க மாட
அச்சமகற் றிடும்அபய வரத மாட
அண்டசரா சரங்களுமே அருளால் ஆட
இச்சையுடன் எழுமங்கை நாச்சித் தாயின்
இனியடியர் கண்களிலே விழிநீ ராட
மெச்சுமெழு வடிவயலின் அனலை மேவும்
மீனதிம ஞேன்மணியே ஆடீர் ஊஞ்சல்.

6. அயனுட அரியாட அரனும் ஆட
அரம்பையரும் களித்தாட அரவ மாட
மயனுட மதியாட ரவியும் ஆட
மறையாட நதியாடத் திரையு மாட
சுயமான எழுவாட மழுவும் ஆட
சுந்தரியாம் எழுமங்கைத் தாயு மாட
தயமான தமிழ்சூழும் அனலை மேவும்
நாயகிம ஞேன்மணியே ஆடீர் ஊஞ்சல்.

7. மானுட மழுவாடத் துடியு மாட
மலர்க்கரத்தில் கரும்பினெடு கலச மாட
வானுட நல்லரசும் வேம்பு மாட
வளருமெழு வடிவயலின் கதிர்க ளாடத்
தேனுன எழுமங்கை நாச்சித் தாயின்
தெவிட்டாத கருணைமழை சொரிந்தே ஆட
ஊனுவி உருக்குதலம் அனலை மேவும்
உமையேம ஞேன்மணியே ஆடீர் ஊஞ்சல்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8, ஆதித்த ஞாயிறுவெண் குடையை ஏந்த
அசைத்தால வட்டத்தைத் திங்கள் தூக்க
வேதத்தை ஓதுபவர் செவ்வாய் பூக்க
விண்ணரசு தலவேம்பு தன்னைச் சேர
கீதப்பண் கலைச்செல்வி யாழன் போடு
கானம்பா டிடவெள்ளித் தண்டை கொஞ்ச
நாதத்தில் ஆசனித்தே அனலை மேவும்
நாரணிம னோன்மணியே ஆடீர் ஊஞ்சல்.

9. செழுங்கலையின் வாணியுமோர் வடந்தொட் டாட்டச்
செங்கமலச் செல்வியுமோர் வடந்தொட் டாட்ட
எழுங்கவிஞர் அரம்பையரோர் வடந்தொட் டாட்ட
ஏத்தியுன்தன் அடியருமோர் வடந்தொட் டாட்ட
உழுங்கழனி எழுவடிவாழ் மாதா நீயே
உலகாண்ட நாயகியே ஆடீர் ஊஞ்சல்
பழந்தமிழின் புலவர்சூழ் அனலை மேவும்
பார்க்கவிம னோன்மணியே ஆடீர் ஊஞ்சல்.

10. எழுமரத்தின் உருவாகி வந்த மர்ந்தே
எழிலாக அருள்தந்த கோலங் கண்டே
எழுமங்கை வானிருந்து முன்னாள் வந்தே
ஏத்தியுனைப் பூஜித்த கதைகள் கேட்டே
தொழுதுன்னை வணங்கிடவே தொண்டு செய்து
துணைநீயே எனுமடியர்க் கருளும் செய்தாய்
எழுவடியின் வயல்பொலியும் அனலை மேவும்
எழிலீம னோன்மணியே ஆடீர் ஊஞ்சல்.

11. தீராத பிணியெல்லாம் தீர்க்கும் தாயே
தினம்அடியர் மனமுருக அருளும் செய்தாய்
வாராமல் இடர்தம்மை நீக்கும் தேவி
வந்தெழு வடிவயலில் அமர்ந்த மாயே
கூரான திரிசூலப் படையு மேந்திக்
கொடும்மகிஷா சூரனையே கொன்ற நீலி
ஊரான சிவபதியாம் அனலை மேவும்
உத்தமிம னோன்மணியே ஆடீர் ஊஞ்சல்.

12. ஐங்கரனின் அன்னையே ஆடீர் ஊஞ்சல் 183611
ஐயப்பன் தாயவளே ஆடீர் ஊஞ்சல்
சங்கரனின் நாயகியே ஆடீர் ஊஞ்சல்
சண்முகனின் மாதாவே ஆடீர் ஊஞ்சல்
வெங்கடவன் சோதரியே ஆடீர் ஊஞ்சல்
விசாலாக்ஷி காமாக்ஷி ஆடீர் ஊஞ்சல்
சங்குவயல் எழுவடியின் அனலை மேவும்
சாம்பவிம னோன்மணியே ஆடீர் ஊஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழி

செந்தண்மை அந்தணரும் வானோர் வாழி!
செகத்தினில் பசுவினங்கள் செழித்தே வாழி!
முந்தும்மும் மாரிமழை முகிலும் வாழி!
முதன்மைபெறு செங்கோலும் சிறந்து வாழி!
நந்தமிழும் வாழிநங்கை கற்பும் வாழி
நல்லறமும் சைவநெறி ஞானம் வாழி!
சந்ததமும் நன்னகராம் அனலை வாழி
சுந்தரிம னோன்மணியும் வாழி! வாழி!!

சுபம்

## எச்சரிக்கை

சீரோங்கிடும் அனலைப்பதித் தேவீ எச்ச ரிக்கை
செழுமாஎழு மங்கைநாச்சித் தாயே எச்ச ரிக்கை
ஊரோங்கிடும் அருள்நல்கிடும் மாயே எச்ச ரிக்கை
உமையேமனோன் மணித்தேவியே மாதா எச்ச ரிக்கை

எழுவடிவயல் எழுந்தருள்செய்யும் எழிலீ எச்ச ரிக்கை
ஏழிசைவளர் அனலைப்பதி வாழ்வே எச்ச ரிக்கை
தொழுமடியவர் துயர்துடைத்திடும் தாயே எச்ச ரிக்கை
தேவீமனோன் மணித்தாயேகௌ மாரி எச்ச ரிக்கை

அர நாயகி அரிசோதரி அம்மா எச்ச ரிக்கை
அனலைப்பதி எழுமங்கையே நாச்சீ எச்ச ரிக்கை
வரமேதரும் சிவசக்தியே வரதீ எச்ச ரிக்கை
வாராய்மனோன் மணித்தேவியே மாரீ எச்ச ரிக்கை

நடராஜனின் இடமேவிய நாரீ எச்ச ரிக்கை
நயனத்தருள் சொரிசுந்தரி மாதா எச்ச ரிக்கை
படமாடிடும் அரவந்தனைப் புனைவோய் எச்ச ரிக்கை
பரையேமனோன் மணித்தேவியே பவானீ எச்ச ரிக்கை

## பராக்கு

1. எழுமங்கை நாச்சியே எழிலீ பராக்கு
எழுவடியின் வயல்மேவும் அழகீ பராக்கு
செழுகங்கை யணியரனின் தேவி பராக்கு
ஜனனீம னோன்மணியே தாயே பராக்கு
தொழுதங்கை குவிப்பார்க்கு அருள்வோய் பராக்கு
தொல்லைகள் நீக்குசிவ வல்லியே பராக்கு
கொழுகொங்கைத் துடியிடையோய் கோதாய் பராக்கு
கொஞ்சுதமிழ் அனலைவளர் குமரீ பராக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மஞ்சளதும் குங்குமமும் அருள்வோய் பராக்கு
மாங்கல்யப் பேறருளும் மாரீ பராக்கு
கொஞ்சுதமிழ்க் குதலையருள் கௌரீ பராக்கு
குலவுதமிழ் அனலைமனோன் மணியே பராக்கு
அஞ்சலென அபயமருள் ஆதீ பராக்கு
அண்டசார சரம்பணியும் அகிலா பராக்கு
மிஞ்சுபுகழ் எழுமங்கை நாச்சி பராக்கு
மிளிருமெழு வடிவயலின் தாயே பராக்கு

## லாலி

1. சுந்தரிசு மங்கலிக்கு லாலி சுப லாலி
சுமதிசு பகரிக்கு லாலி சுப லாலி
அந்தரிஅ பிராமிக்கு லாலி சுப லாலி
அனலைம னோன்மணிக்கு லாலி சுப லாலி

2. எழுமங்கை நாச்சிமார்க்கு லாலி சுப லாலி
எழுவடி வயலுக்கும் லாலி சுப லாலி
மழுதிங்கள் சூடுவார்க்கு லாலி சுப லாலி
மனோன்மணி மாதாவுக்கு லாலி சுப லாலி

3. மங்களம் அருள்பவர்க்கு லாலி சுப லாலி
மாங்கல்யம் தருபவர்க்கு லாலி சுப லாலி
குங்குமம் கொடுப்பவர்க்கு லாலி சுப லாலி
கோதைம னோன்மணிக்கு லாலி சுப லாலி

4. நடராஜ சுந்தரிக்கு லாலி சுப லாலி
நாச்சியெழு மங்கையர்க்கு லாலி சுப லாலி
இடமேவும் எழுவடிக்கு லாலி சுப லாலி
இன்பத்தமிழ் அனலைக்கும் லாலி சுப லாலி

## மங்களம்

ராகம்: சுருட்டி தாளம்: ஆதி

பல்லவி

மாதா மனோன்மணிக்கு ஜெயமங்களம் – எழு
மங்கை நாச்சிமார்க்குச் சுப மங்களம்

அனுபல்லவி

ஆதாரச் சங்கர ஆனை முகத்தருக்கும்
நாகேஸ்வரநட ராஜ சுந்தரியர்க்கும்

சரணம்

ஐயப்பனுக்கும் ஆறு முகத்துவேலவருக்கும்
வையகந்தனில் எழு வடிவயல் தலத்திற்கும்
சைவம் தமிழ் வளர்க்கும் தண்பதி அனலைக்கும்
தெய்வத் தொண்டு புரியும் தொண்டருக்கும் யாவருக்கும்

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வழிபடுநர் சபை

உலகிலே தோன்றியுள்ள சீவராசிகள் யாவும் வெவ்வேறு மதத்தினராக இருந்தபோதிலும் அவர்களுக்கிடையேயுள்ள ஒரு பொதுவான இலட்சியம் வழிபடுதலேயாகும். எனவே எந்த ரீதியில் பார்த்தாலும் ஆஸ்திகனாக இருந்தாலும் ஒரு நாஸ்திகனாக இருந்தாலும் அவனுக்குத் தெரிந்தோ தெரியாமலோ ஏதோ ஒரு வழியில் அவனது சீவிய காலத்தில் வழிபடுதலை ஒரு முக்கிய இலட்சியமாக வைத்துள்ளான்.

எனவே மானிடர்கள் யாவரும் ஏதோ ஒரு வகையில் வழிபடுநர்களே.

மதரீதியான வழிபாட்டில் எல்லாச் சமயத்திலும் பார்க்க இந்துசமயத்தில் பயன்தரு கட்டுப்பாடுகள் உள்ளன. இந்த ரீதியில் இந்துமகா சபைகள், வழிபடுநர் சபைகள், கூட்டுப் பிரார்த்தனை சபைகள் போன்றன சமயவளர்ச்சி பேணும் நோக்குடன் தோன்றின.

வழிபடுபவர்கள் யாவரும் வழிபடுநர்களே. எனவே மக்கள் யாவரும் வழிபடுநர்களே. இவர்களால் ஒன்றுகூடி அமைக்கப்பட்டதே வழிபடுநர் சபையாகும்.

ஆலய வளர்ச்சிக்கும் சமயப்பண்பாட்டுக்கும் களங்கம் ஏதும் வராது பாதுகாக்கவும் ஆலயத்தில் சமயக் கட்டுப்பாடுகள் மற்றும் கோட்பாடுகள் யாவற்றையும் சிராகப் பேணுவதற்காகவும் ஆலய வளர்ச்சிக்காக அயராது உழைக்கவும் பரிபாலன சபைக்கு ஒத்துழைப்பு நல்கவும் வேண்டிய நேரத்தில் அச்சபையினருக்கு பயன்தரு நல் ஆலோசனைகள் வழங்கவும் இவ்வழிபடுநர் சபை உறுதுணையாக உள்ளது.

இச்சபையில் பொதுமக்கள் சந்தாப்பணமாக சிறுதொகையைக் கட்டி அங்கத்தவர்களாகச் சேர்கிறார்கள். இவ்வாறு சேர்ந்தவர்கள் தங்களுக்கென ஒரு கட்டுப்பாட்டை விதித்து தங்களுக்குள்ளேயே சிலரைத் தேர்ந்தெடுத்து நிர்வாகமொன்றை அமைத்தார்கள். ஏனையோர் இந்நிர்வாகத்தின்கீழ் இயங்கி ஆலய ஆக்கப் பணிகளைச் செய்கின்றார்கள்.

இவ்வாறான ஒரு வழிபடுநர்சபை ஏராளமான ஆலயங்களில் இருப்பதுபோல் "அனலை ஸ்ரீ எழுமங்கை நாச்சிமார்" ஆலயத்திலும் வெகு சிறப்புற அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இச்சபையில் நூற்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களது தீவிர முயற்சியால் இவர்கள் மேற்படி ஆலயத்தில் அழகுற அமைந்துள்ள வைரவர் ஆலயக் கட்டிட திருப்பணிக்கு தங்களாலியன்ற சிறுபங்களிப்பைச் செலுத்தியுள்ளனர். இச்சபையின் பொதுநோக்கம் இவ்வாலயம் மதம் வழிபாடு என்பன அழகுற வளர்ச்சியடைய வேண்டும் என்பதே. இவ்வவாக் கொண்ட ஆண்களும் பெண்களும் சுயநலம் இன்றி பொதுநலம் கருதி செயற்படுவது மிகவும் பாராட்டத்தக்கது. இவ்வழிபடுநர் சபை தொடர்ந்தும் இயங்க அன்னை அருள் பாலிப்பாளாக.

இவ்வாறான இச்சபை 1986ம் ஆண்டு அனலையில் ஸ்ரீ எழுமங்கை நாச்சிமார் கோவிலில் பொதுமக்கள் ஒன்றுகூடி அமைக்கப்பட்டதாகும்,

நன்றி

183611

வே. கணேசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் — உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு" — திருக்குறள்

ஈழவள நாட்டின் வடபால் அமைந்துள்ள சப்த தீவுகளில் ஒன்றான அனலையப்பதியில் எழுவடிவயல் என்னும் திவ்ய ஷேத்திரத்தில் கோயில் கொண்டெழுந்தருளி எந்நாளும் தாய் போல் அடியார்களுக்கு அருளைப் பொழிந்து கொண்டிருக்கும் எழுமங்கை நாச்சிமார் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் திருவடிகளில் இம் மகாகும்பாபிஷேக மலரினைத் திரிகரணசுத்தியோடு சூட்டியிருக்கின்றோம்.

இம்மலரானது அறிஞர்கள், பேராசிரியர்கள், சிவத்தொண்டர்களின் இதயப் பூங்காவில் மலர்ந்த மலர்கள். அம்பிகையினுடைய பாதாரவிந்தங்களை நினைந்து நினைந்துருகி அர்ச்சிக்கப்பட்ட இம்மலரில் அம்பாளினுடைய கிருபா கடாட்சமும் செறிந்திருப்பதால் இம்மலர்கள் அன்னை மனோன்மணியின் அருட்பிரசாதமாகும். இவ்வரிய மலரினைப் படைப்பதற்கு உதவிய அன்பர்களுக்கும், ஞானதானம் செய்த சான்றோர் அனைவருக்கும் எமது உள்ளங்கனிந்த நன்றிகள் உரித்தாகுக.

சாஸ்திர விதிப்படி ஆலயம் அமைப்பதில் அனுபவமும், தேர்ச்சியும் பெற்று, ஆலயத்தை அழகுற அமைத்துத் தந்த பிரதம சிற்பாசாரியார் அராலியூர் திரு. மு. மார்க்கண்டு அவர்கட்கும், அவர் தம் புதல்வர்களுக்கும், குழுவினருக்கும், மூலஸ்தான அம்பாள் விக்கிரகத்தை அழகுறச் செதுக்கித் தந்த தமிழ்நாடு மாமல்லபுரத்தைச் சேர்ந்த திராவிடன் கலைக்கூட சிற்பிகளுக்கும், இவ்விக்கிரகத்தை செய்விப்பதற்கு முன்னின்று உழைத்த திரு. க. துரைராசா அவர்களுக்கும், அம்பாள் விக்கிரகத்தை செய்வித்து எத்தனையோ கஷ்டங்களின் மத்தியில் இங்கு கொண்டு வந்து ஒப்படைத்த பெருந்தகை திரு. வ. பழனி, ஆலய பரிபாலன சபைத் தலைவர் அவர்களுக்கும் பரிவார மூர்த்திகள் எழுந்தருளி விக்கிரகம் என்பவற்றை அழகுறச் செய்துதந்த நீராவியடி திரு. சு. பாஸ்கரன் ஆசாரியார் அவர்களுக்கும் அவரின் குழுவினருக்கும் அம்பாளின் வெள்ளி அங்கியை கலைநயம் மிக்கதாகச் செய்துதவிய சுன்னாதிட்டி திரு. து. சின்னராசா ஆசாரியார் அவர்களுக்கும் காவியத்தை ஓவியமாக்கி ஓவியத்தைச் சிற்பமாக்கும் சிற்பவிற்பன்னர் நயினை திரு. வ. வேதநாயகம் அவர்களுக்கும் அவர்தம் குழுவினருக்கும் ஆலயக் கட்டிட வேலைகளை விரைவாக அழகுற அமைத்துத்தந்த உள்ளூர் வெளியூர் கொத்தனார்களுக்கும் ஆலயக் கொட்டகை வேலைகளையும் கதவு முதலான மரவேலைகளையும் மிகவும் சிறப்புற அமைத்துத் தந்த பிரதம ஆசாரியார் திரு. க. அருணாசலம் அவர்களுக்கும் அவர்தம் குழுவினருக்கும், குறிப்பாக தச்சுத்தொழில்நுட்ப விற்பன்னர் திரு. க. நமசிவாயம் அவர்களுக்கும், ஆலயத்தின் மின்சார யந்திரத்தை செவ்வனே திருத்தி அமைத்துத் தந்த யாழ்ப்பாணம் வெள்ளாந்தெருவைச் சேர்ந்த திரு. க. மகாதேவா அவர்களுக்கும் ஏனைய யந்திர வல்லுநர்களுக்கும் ஆலய மின்சார வயறிங்கைச் சிறந்த முறையில் செய்துதந்த வட்டுக்கோட்டை திரு. சி. சத்தியேந்திரா, திரு. சி. ஸ்ரீதரன் சகோதரர்களுக்கும் எமது நன்றிக்கடனைச் செலுத்தி சகல செல்வங்களும் பெற்று வாழவேண்டுமென்று அன்னையின் பாதங்களைப் பணிகின்றோம்.

பிரதம குருவாகிய பிரதிஷ்டா பூஷணம் ஊரெழு சிவஸ்ரீ பா. வைத்தியநாதக் குருக்களவர்களுக்கும், சர்வசாதகர் தர்மசாஸ்தா குருகுல அதிபர் இணுவில் சிவஸ்ரீ மகாதேவாக் குருக்கள் அவர்களுக்கும், வேதாகம சாஸ்திர வித்தகர்களாகிய சிவாச்சாரியப்பெரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களும் மந்திர, தந்திரயந்திரங்களால் தெய்வ சாந்நித்தியத்தை மேலும் மேலும் செலுத்தி பிம்பஸ்தானமும் கும்பாபிஷேகமும் மேலோர் போற்றச் சிறப்புறச் செய்து அடியார்களை உய்வுறச் செய்துள்ளார்கள். பூசுரர்களாகிய அவர்கள் எல்லோரினதும் கைங்கரியத்தை நினைந்துருகி பணிவன்புடன் அவர்கள் திருவடிகளில் எமது நன்றியைச் சமர்ப்பிக்கின்றோம்.

அன்னையின் ஆலயத் திருப்பணிகளில் பெரும்பகுதியை பல கஷ்டங்களின் மத்தியிலும் நிறைவேற்றித் தந்த சென்ற பரிபாலன சபை உறுப்பினர்களையும் ஆலயத் திருப்பணிகளையும் மகா கும்பாபிஷேகத்தையும் மிகவும் சிறப்பாகச் செய்து நிறைவேற்ற நிதியுதவி பொருளுதவி செய்த தர்மஸ்தர்களையும் ஒவ்வொரு திருப்பணிகளையும் யாகங்களையும் தம் பொறுப்பில் செய்து நிறைவேற்றிய அம்பிகை அடியார்களையும் ஓய்வொழிவின்றி ஆலயத் திருப்பணிகளை முன்னின்று நடாத்திய பரிபாலன சபை உறுப்பினர்களையும் ஆலய முகாமையாளர் திரு. க. ஆறுமுகம் அவர்களின் பாரியார், பிள்ளைகளின் அளப்பரிய தொண்டுகளையும், தனது சுகயீனத்தையும் பொருட்படுத்தாது ஆலயத் திருப்பணிகளின் வரவு செலவுக் கணக்கு விபரங்களைத் தினமும் பரிசீலனைசெய்து தந்துதவிய கணக்காய்வாளர் திரு. வே. கணேசன் அவர்களின் சேவைகளையும் நெஞ்சு நெகிழ்வோடு நினைவுகூர்ந்து எமது நன்றியைச் சமர்ப்பிக்கின்றோம்.

கும்பாபிஷேகத்தின்போது மங்கள இசை முழங்கிய நல்லைநகர் திரு. எஸ். சிவசாமி குழுவினருக்கும் ஏனைய கலைநிகழ்ச்சிகளில் பங்குபற்றிய அன்பர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

குறுகிய காலத்திற்குள் மலரை அச்சிட்டுதவிய சாந்தி அச்சக உரிமையாளர் அவர்களுக்கும் அவர்தம் அலுவலர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

அம்பாளிற்கு ஓர் ஆலயத்தை அழகுற அமைத்து சிறப்புற கும்பாபிஷேகத்தினை நிறைவேற்ற நாயினும் கடையோமாகிய எமக்கு வாய்ப்பளித்த சகல அடியார்களுக்கும் நன்றிகூறி அன்னை மனோன்மணியின் ஆலயத்திருப்பணி மற்றும் கும்பாபிஷேக கைங்கரியங்களில் திரிகரண சுத்தியோடு உழைத்த அனைவரும் அம்பிகையின் திருவருளிற்கு ஆளாகி நீடூழி வாழ வேண்டுமென்று அவளுடைய மென்மலர்ப் பாதங்களைப் பணிந்து விண்ணப்பம் செய்து அமைகின்றோம்.

வணக்கம்

இங்ஙனம்
**பரிபாலன சபை**

ஸ்ரீ எழுமங்கை நாச்சிமார்
ஸ்ரீ மனோன்மணி அம்பாள் தேவஸ்தானம்
அனலைதீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ARCHIVES

University of Jaffna
183611
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org